அன்னபோதயனுந்தேவர்க்கரசனுமாழிவேந்து
முன்னர்வந்திறைஞ்சியேத்தமுனிவரும்பேறுநல்கித்
தன்னகரடைந்துதீங்காத்தனிப்பெருங்கணத்திலேனை
யின்னருள்சுரந்துநோக்கியிலிங்கத்திற்புகுதுமெல்லை. (சு)

வேத்திரப்படையோனுதிகணைதிபர்வீழ்ந்துபால
நேத்திரவன்பர்க்கன்பநிரஞ்சனநிருத்தானந்த
சாத்திரமுடிவுந்தேறுத்தனிமுதலொருவனென்னைத்
தோத்திரவகையாலேத்தித்தொழுதான்றுவிலைவல்செய்வார். (எ)

ஜயவிவ்விலிங்கமூர்த்திக்காட்டவுமடியேழுந்து
யுய்யவுங்கங்கையாதிநதிகளுமுலகத்துள்ளோர்
மையறுதடாகநீரு மற்றிலையிருமைப்பேறுந்
செய்யவோர்தீர்த்தமிங்குண்டாக்கெனச்செப்பலோடும். (அ)

அத்தகையிலிங்கமூர்த்திக் கருத்தனதன்கீழ்சாராக
முத்தலைவேலைவாங்கி நாட்டினன்முதுபார்கீண்டு
பைத்தலைப்பாந்தள்வேந்தன் பாதலங்கீண்டுபோயெண்
கைத்தலப்பிரமனண்ட கடாகமுங்கீண்டதவ்வேல். (கூ)

அவ்வழிப்புறம்புசூழ்ந்து கிடந்தபேராழியூழிப்
பௌவநீரொன்னவோங்கப் பாணியாலனைமத்துவேணித்
தெய்வநன்னீரைத்தூவிக் கலந்துடாதீர்த்தமாக்கிக்
கைவனைகபாலிநந்தி கணத்தினைநோக்கிக்கூறும். (ங)

இன்னமாதீர்த்தந்தன்னை யெனைப்பலதீர்த்தங்கட்கு
முன்னம்யாமிங்குகண்ட முதன்மையாலாதிதீர்த்த
மென்னலாமினியுண்டாக்குந் தீர்த்தங்களெவைக்குமேலாய்
மன்னலாற்பரமதீர்த்த மெனப்பெயர்வழங்கலாகும்.

மருட்கெடமூழ்கினோர்நன் மங்கலம்பெறலாலைம
மருட்சிவதீர்த்தமாகும் புன்னெறியகற்றியுள்ளத்
திருட்கெடஞானந்தன்னை யீதலான்ஞானதீர்த்தந்
தெருட்கதிதாலான்முத்தி தீர்த்தமென்றிதற்குநாமம்.

குடைந்துதர்ப்பணமுஞ்செய்து தானமுங்கொடுத்தம்மாடே
யடைந்தெழுத்தைந்துமண்ணி யுச்சரித்தன்பாலெம்மைத்
தொடர்ந்துவந்திறைஞ்சிச்சூழ்ந்து துதித்தெமையுவப்பச்செய்தோ
ருடம்பெடுத்ததனலெந்த வுறுதியுண்டதனைச்சேர்வார். (ரு)

இந்தநீரெம்மையாட்டி னேழிரண்டுலகின்மிக்க
வந்தமிறீர்த்தமெல்லா மாட்டியபயன்வந்தெய்தும்
வந்தின்மூழ்கியிங்கு வைகுநங்குறியையுங்கள்
சிந்தையிலார்வம்பொங்கப் பூசனைசெய்மினென்னை. (ரூ)

விண்ணவர்தட்மின்மேலாம் வேதியனகின்ற
பண்ணவன்முனந்நீரிற் படிந்துதன்னனுனையாலே
யண்ணலங்கணத்திணை மூழ்குவித்தனதியாய
புண்ணியவிலிங்கந்தன்னுட் புகுந்தினிதிருந்தான்மன்னே. (ரூ)

அந்தமாநீரானந்தி யாதியோர்விதியாற்சோம
சுந்தரன்முடிமேலாட்டித் துகளறப்பூசையாற்றிச்
சிந்தையில்விழைந்தவெல்லா மடைந்தனர்செம்பொற்கஞ்சம்
வந்தவாறிதுவத்தீர்த்த மகிமையுமுணைப்பக்கேண்மின். (ரூ)

வளையெறிதரங்கஞான வாவியைநோக்கிற்பாவத்
தளையறுமூழ்கின்வேண்டுங் காமியமெல்லாஞ்சாரு
மூளமுறமூழ்குமெல்லை முழுக்கொன்றற்குலகத்துள்ள
வளவறுதீர்த்தமெல்லா மாடியபயன்வந்தெய்தும். (ரூ)

மெய்யைமண்ணுதிகொண்டு விதிவழிசுத்திசெய்து
மையறுவருணசூக்க மந்திரமின்றுமூழ்கிற்
றுய்யமாதீர்த்தமெல்லாந் தோய்ந்துநான்மறையுமாய்ந்தோர்
கையிலெப்பொருளுமீந்த காசறுபேறுநல்கும். (ரூ)

தெய்வவித்தீர்த்தந்தன்னை நினைவின்றித்தீண்டினலு
மவ்வியவினையினீந்தி யரும்பெறல்வீடுசேர்வ
ரிவ்வுனைமெய்யேயாகு மென்னெனின்மனத்தாறன்றி
வெவ்வழறீண்டினலுஞ் சுடுமன்றிவிடுமோவம்மா. (ரூ)

ஆருமந்நீரிலென்று மாடினர்சீவன்முத்தி
சேருவரந்நீராடுந் சிறப்புறுபயனுக்கொவ்வா
வாருணவாக்கினேய மந்திரமிவைமூன்னன
பேருணர்வளிக்குநானஞ் செய்தவர்பெறும்பேறெல்லாம். (ரூ)

அன்னநீர்தனையுமாடி யாலவாயுடையநாதன்
றன்னையும்பணிவோன்மேலப் பரகதிதன்னைச்சாரு
மென்னனன்னூலிற்சொன்ன பவித்திரமெனைவக்குமேலாய்ப்
பின்னரும்புனிதமான பவித்திரமாகிநிற்கும். (உக)

ஆதரவிலனையங்கீராடினேன் சுவர்க்கஞ்சேரு
மாதரவுளனையழுந்தி வானவராதியாரேனைர்க்
காதரவரிசியெள்ளுத் தருப்பணமமையச்செய்தோ
னாதரவேள்விமுற்று மாற்றியபயனைச்சேரும். (உஉ)

ஏனைமாதலங்கடம்மி லிருந்துசெய்விரதம்பூசை
தானமாதருமமோமம் தவஞ்செபந்தியானந்தம்மா
லானமாபயனிற்கோடி யதிகமாமடைந்துழுந்தி
னானமாதீர்த்தனூங்க ணிருந்தனைவகயந்துசெய்யின். (உங)

பிறந்தநாளங்கீர்முழ்கின் மேலைவெம்பிறவிப்பௌவ
மறிந்திடுமறிதேள்கும்ப மதிகளின்முழ்கித்தென்பா
லுறைந்தவர்பொருட்டுப்பிண்ட முதவினுலவர்தாமாழ்ந்து
நிறைந்திடுபிறவிப்பௌவ நின்றுமேலெழுவரன்றே. (உச)

அத்தடமருங்கின்யாவர் தென்புலமடைந்தோர்தங்கள்
சித்தமாசகற்றவேண்டிச் செய்கடன்முடிக்கினன்றே
னொத்தனையெண்ணேனார்ந்தாலு மெள்ளுக்காயிரமாண்டாக
வத்தனையாண்டுமட்டி மவனாவின்னுளைவப்பார். (உரு)

மூவகையுலகிலுள்ள தீர்த்தமுமுறையாலென்றுந்
சேவகஞ்செய்யுமிந்தத் தீர்த்தமெங்நாளுமுழ்கி
யேவரங்கீராலென்று மீசனைப்பூசைசெய்வோ
ராவரிப்பிறவிதன்னி லவர்கதிக்கணையச்சார்வார். (உசு)

விதித்திடலரியநித்த வேள்விமாவிரதம்வேதந்
தடுத்திடலரியதானந் தவமிவைதரும்பேறல்லா
மடுத்ததன்கணையில்வைகி யீசனையருச்சிப்போர்க்குக்
கொடுத்திடுபுண்ணியத்திற் கோடியிலொன்றுக்கொவ்வா. (உஎ)

உம்மையிற்பிறவிதோறு நியமநல்லொழுக்கம்பூண்டு
பொய்ம்மையில்விரதந்தானந் தவஞ்செய்துபுனிதராகிச்
செம்மைநன்னெறியினின்ற சித்தருக்கலதித்தீர்த்த
மிம்மையிலடைந்துநித்த மாடுதற்கெய்தாதன்றே. (உஅ)

---

* என்ன - எப்படிப்பட்ட.

மேற்படி வேறு:

மதிகதிரோனிடத்தொடுங்கு தினந்திங்கட்பிறப்பரவம்வாயங்காந்து
கதிர்கடமைவிழுங்குதினம்விதிபாதமிந்நாளிற்கருதிமூழ்கித்
துதிகடருப்பணைந்தானம் புரிதன்மனுவோதுதலத்தாகையொன்ற
றதிகபலனம்முறைநூறுயிரநூறுயிரமோரனந்தமாகும். [ற்கொன்

பொருவரியதகர்த்திங்கடலாத்திங்களிவையுதிக்கும்போதுமூழ்கி
னைருபதிணையிரமடங்காஞ்சுறவுகளைவத்தாளலவணுதிப்பின்மூழ்கி
னிருபதிணையிரமடங்காமிந்திரவியிடத்தொடுங்குமிந்துவாரம்
வருவதறிந்தாடிமனுவோதன்முதற்செயினனந்தமடங்குண்டாகும்.

பிரயாகைதனின்மகரமதிநாண்முப்பதுங்குடைந்துபெறும்பேறி
ந்தத், திணையார்பைந்தடத்தொருநாண்மூழ்குவோன்பெறும்விரதசீ
லம்பூண்டு, வனையாமலொருவருடம்படிந்துமையையமரசிகாமணி
யாம்வேத, வுனையானைவழிபடுமேன் மலடிக்குநன்மகப்பேறுண்டா
மன்றே. (நக)

எண்டிசையாதிவாவிவடிவானமாதீர்த்தமெல்லாமிப்பொற்
புண்டரிகதடத்திலொருகோடியிலோர்கூறுநிகர்போதாவீது
கண்டதலைறந்தீண்டப்பெற்றதனைற்பொருளங்கையாலள்ளிக்
கொண்டதனைன்பநலங்குடைந்ததனற்பேரின்டங்கொடுக்குமன்றே

மேற்படி - வேறு.

முன்னவனருளிச்செய்தகாரணமுறையாலன்றி
யின்னமிப்புனிதவாவிக்கேதுவாலெய்துநாம
மின்னவிர்சடையான்சென்னிமேவியகங்கைநீரிற்
பின்னதுகலந்தநீராற்பெறுஞ்சிவகங்கையென்றும். (நஙு)

அலகிலாத்தீர்த்தந்தம்முளதிகவுத்தமமாய்த்தோன்றி
யிலகலாவிதனைத்தீர்த்தவுத்தமமென்பாராய்ந்தோர்
பலவிதழ்விரித்துச்செம்பொற்பங்கயமலர்ந்தநீரா
லுலகவர்யாரும்பொற்றூமனமாயினவுரைப்பரன்றே. (நச)

தருமமுன்னுகுநான்குந்தருதலாற்றருமதீர்த்த
மருமைசாலருத்ததீர்த்தமரும்பெறற்காமதீர்த்த
மிருமைசேர்முத்திதீர்த்தமென்பதூமினையதீர்த்தம்
வெருவருபாவமென்னும்விறகிலுக்கெரியாமன்றே. (நஞ)

இவ்வருந்தலத்தினன்றபெருமையுமிகால்செம்பொற்
றெய்வதபதுமதீர்த்தப்பெருமையுந்தெரிப்பக்கேட்டோ
னெவ்வமில்போகம்வீடுபெறுவனென்றிசைத்தான்முக்கீர்ப்
பொவ்வமுண்டையர்வேந்தன்பரிபவவிழுமந்தீர்த்தோன்.

தீர்த்தவிசேடம் - மூற்றிற்று.

ஆகப்படலம் - எ - க்கு - திருவிருத்தம் - உகூ0.

மூர்த்திவிசேடம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆலவாயலர்ந்தசெம்பொனம்புயப்பெருந்தீர்த்தத்தின்
மேலவாம்பெருமைதன்னைவிளம்புவாமவரோயங்க
ணீலமாமிடற்றுமூக்கணிராமயனறிவானந்த
மூலமாவிலிங்கமேன்மைமுறையிலுலறையலுற்றும். (க)

பொன்னெடுமேருவெள்ளிப்பொருப்புமந்தரங்கேதாரம்
வன்னெடும்புரிசைசூழ்ந்த வாரணவாசியாதிப்
பன்னருந்தலங்கடம்மிற் பராபரவிலிங்கந்தோன்று
முன்னரிக்கடம்பின்மாடே மூலத்ததிச்சைவவிலிங்கம். (உ)

அப்பதியிலிங்கமெல்லாமருட்குறியிதனிற்பின்பு
கப்புவிட்டெழுந்தவிந்தக்காரணமிரண்டிலுலு
மொப்பரிதானஞானவொளிதிரண்டானவிந்தத்
திப்பியவிலிங்கமூலவிலிங்கமாய்ச்சிறக்குமன்றே. (ங)

இந்தமாவிலிங்கத்தெண்ணரன்கிலக்கணவிச்சைமேனி
யந்தமிலழகன்பாகத்துமையொடுமழகுசெய்து
சந்ததம்விளக்கஞ்செய்யுந்தகைமையைநோக்கிச் *சோம
சுந்தரனென்றுநாமஞ்சாத்தினர்துறக்கவாணர். (ச)

திறப்படுமுலகமெங்கும்வியாபியாய்ச்சிறந்துநிற்கு
மறப்பெருங்கடவுள்சோமசுந்தரனதலைன்றே
கறைக்கதிர்வடிவேற்றென்னன்கையிற்பொற்பிரம்புபட்ட
புறத்தடித்தழும்புமூன்றுபுவனமும்பட்டதன்றே. (ஞ)

சொற்றவிச்சமட்டியானசோமசுந்தரனைக்காணப்
பெற்றவர்விபட்டியானபிறபதியிலிங்கங்காண
லுற்றவராவொன்னென்றுணாக்கின்வேரூட்டநீர்போய்
மற்றையசினைகளெல்லாந்தழுவிக்குமரத்தின்மாதோ. (ட)

எத்தலத்தியாவனெண்ணெண்டிருவிளையாடல்செய்தா
னத்தலத்தவனுக்கொப்புமதிகமாஞ்சிறப்புப்பெற்ற
வுத்தமனென்றுமெந்தவுலகிலுமில்லையந்த
வித்தகனதிகத்தன்மையினத்தினின்விளம்பக்கேண்மின். (ள)

---

* சோமசுந்தரன் - உமையோடுகூடியவழகன்.

பொருப்பினுட்டலைமையெய்தும்பொன்னெடுங்குடுமிமேரு
தருக்களிற்றலைமைசாருந்தண்ணறுந்திதய்வதாரு
விருப்புறுவேள்விதம்முண்மேம்பதும்புரவிமேத
மருட்படுதானந்தம்முள்விழுமிதாமன்னதானம். (அ)

மனிதரிலுயர்ந்தோராதிமறையவர்தேவர்தம்மிற்
பனிதருதிங்கள்வேணிப்பகவனேயுயர்ந்தான்வேட்டோர்க்
கினிதருள்விரதந்தம்முளதிகமாமிந்துவாரம்
புனிதமந்திரங்கடம்முட்போதவைந்தெழுத்துமேலாம். (ஃ)

மின்னைசான்மணியிற்சிந்தாமணிவரம்விழுப்பநல்குந்
தன்னைசாலறங்கடம்மின்மிகுஞ்சிவதருமமென்ப
வின்னைசானெறிநின்றோருருக்கேற்குநற் * கலங்கடம்மி
னன்னைசான்றவரோமுக்கணைதனுக்கன்புபூண்டோர். (க0)

தியவான்சுவைப்பாலாவிற்றேவராவதிகம்பல்வே
றுயமாதீர்த்தந்தம்முளதிகமாஞ்சுவணகஞ்ச
மாயமாசறுக்கவெல்லாத்தலத்திலும்வதிந்துழன்னுந்
தூயவானவரிற்சோமசுந்தரன்சிறந்தோதாணுகும். (கக)

அந்தமுமுதலுமில்லாவகண்டபூரணமாயார்க்கும்
பந்தமும்வீடுநல்கும்பராபரச்சோதிதானே
வந்தனைபுரிவோர்க்கிம்மைமறுமைவீடளிப்பானந்தச்
சுந்தரவிலிங்கத்தென்றும்விளங்குவான்சுருதியேத்த. (கஉ)

இத்தகுசயம்புதன்னேயேனையசயம்புவெல்லா
மித்தமுந்தெரிசித்தேதகுநிருமலிவ்வாளியாமிந்த
வுத்தமவிலிங்கங்கண்டோருனைபுணர்வொடுங்கவுள்ளே
சித்தமாசொழியத்தோன்றுஞ்சிவபரஞ்சுடராக்கண்டோர். (கங)

இத்தனிச்சுடரைநோக்கண்டிறைஞ்சிநேர்பாவமெல்லாங்
கொத்தழற்பொறிவாய்பட்டபஞ்சுபோற்கோடமூள
மெய்த்தவஞ்சிதையுமாபோன்மருந்திலைவீடுநோய்போ
லுத்தமகுணங்களெல்லாமுமேலோபத்தாலழியுமாபோல். (கச)

கலிகடவிரவிதோன்றக்கருகிருளுடையுமாபோ
லொளிகழுபெருங்காறள்ளவுடைபதுமகம்போல
வலிகழுமடங்கல்சீறமாயுமால்யானைபோலக்
குலிசவல்லேறுதாக்கப்பொடிபடுங்குன்றம்போல. (கஞ)

---

* கலம்-தானபாத்திரம்.

மருட்சிசெய்காமமோபான்மதிகெடுமாறுபோல
வருட்சிவஞானநோக்கால்வலிகெடுமவிச்சைபோலத்
தருக்குறுமூவணஞ்சேறத்தழலராவிளியுமாபோற்
செருக்குறவழியுங்கற்றகல்விபோற்சிதையும்மன்றே. (கசு)

புலரியிற்சீவன்முத்திபுசோசனைக்காணப்பெற்று
லலகடனன்குட்பட்டவவனிமாதானஞ்செய்த
பலனுறுங்கதிர்காலுச்சிவைகலிற்பணியப்பிபற்றுற்
கலைஞர்பாலூற்றுப்பத்துக்கபிலமாதானப்பேறும். (கள்)

விண்ணிடைப்பரிதிப்புத்தேணண்மேலீர்குளிக்குமெல்லை
யண்ணலவணங்கிற்கோடியானிணத்தானப்பேறும்
பண்ணவர்பரவும்பாதியிருள்வயிற்பணியப்பெற்றால்
வண்ணவெம்புரவிமேதமகம்புரிபெரும்பேறெய்தும். (கஎ)

இன்னனவதிகமாம்பேறறிந்துபோயெத்தேதவர்க்கு
முன்னவன்சமட்டிவிச்சாபுரமுறைமுதல்வன்றன்னைச்
சொன்னவிக்காலங்தோறு மிறைஞ்சியுந்தாழுதுஞ்சூழ்ந்தும்
பொன்னடிக்கன்பராஇவழிபடும்புனிதசீலர். (கஞ)

உம்மையில்வினைகளென்னும்பிணியவிழ்ந்தொருவித்தாய்
செம்மையராகியாளைத்திருவொடுசெல்வமோங்க
வெம்மையில்போகமூழ்கிமலவிருள்வீக்கநீக்கி
னமம்மலிகண்டத்தெந்தைகோன்மலரடிநீழல்வாழ்வார். (உ0)

மேற்படி வேறு.

அறவுருவலைவாயாணமஞ்செவிமதித்தாலடைந்தபத்துப், பிறவிவி
னையறுஞினைந்தாலூறுபெரும்பவபாவப்பிணிபோங்கூட, லிறைவனி
யின்றிறைஞ்சுதுமென்றெழுந்தும்மனைப்புறம்போந்தாலீரைஞ்னூறு
மறமூறுவெம்பவத்திறைத்தபாதகவல்வினையனைத்துமாயுமன்றே.

புனைழக்கைவனைதாலத்தானைத்தெரிசித்தேதாராயிரவாம்புரவி
வேள்வி, தனைழத்தபெரும்பயன்பெறுவ ருருத்திர *சூக்கம்மதனைற்
றவவாளேர்க, டொழற்கரியான்றனைத்துதித்தோர்கனைத்துக்காயிர
ராசசூயமாக, மிறைழத்தபெரும்பயன்பெறுவர்சமட்டிவடிவாகியவவ்
விலிங்கந்தன்னை. (உஉ)

அங்கையளவாகியாணன்னீராட்டிப்பூசித்தோரளவிலினைத் [ரூன்
துங்கதலத்துறையிலிங்க மூர்த்திகளைச்சிவாகமநூல் சொன்னவாற்

சூக்கம் = சூக்தமென்னும் வடமொழித்திரிபு.

ம்ங்கலமாகியமுகம னீரொட்டும்வழுவாதுவாசந்தோய்ந்த
செங்கனகமணிகலசப்புனலாட்டிமாபூசைசெய்தோராவார். (உந)

அவ்வண்ணஞ்சுந்தரனையந்தமுதமாலுதவுமைந்துதீந்தேன், செவ்
வண்ணக்கனிசாந்தச்சேறுமுதன்மட்டித்துத்தேவர்தோ, மெய்வ
ண்ணங்குளிரவினைப்புனலாட்டி மாபூசைவிதியாற்செய்தோர், மை
வ்வண்ணவினைநீந்தியறமுதலற் பொருளடைந்துமன்னிவாழ்வார்.
நல்லவகைமுகமனீரொட்டுள்ளும்வடித்தவினைநன்னீராட்ட
வல்லவர்நாறுயிரடர்மேதமகப்பயன்பெறுவர்வாசநான
மெல்லவிர்குங்குமஞ்சாந்தமிலைபலவுமட்டித்தோதொழிலார்தெய்வ
மூல்லைநகையாரோடும்வினைக்கலலைகுளித்தின்ப மூழ்கிவாழ்வார்.
நன்மலரான்முலவாயான்முடிமேற்சாத்தினையந்துநாறு, பொன்
மலர்கொண்டயற்பதியிற் பூசித்தபயனெய்தும்புனிதபோகத், தன்
மைதருசுந்தரற்குத்தூபமொருகாற்கொடுப்போர் தமக்குத்தாங்கள்,
சொன்மனமெய்புறச்செய்தகுற்றமாயிரம்பொறுப்பன்சுருதிநாதன்

திருவமுதுந்தீவேதிப்போரவிழுான்றற்குகமொன்றுச்சிவலோ
கத்தின், மருவிநிறைபோகமுடன் வைகுவர்தாம்பூலமுக வாசமீந்
தோர், பொருவரியகடவுளரான்டொருநூறுகோடிசிவ புரத்துவா
ழ்வா, ரொருபளிதவிளக்கிடுவோர் வெண்ணிறமுங்கண்ணுதலுமு
டையராவார். (உள)

நறுந்திருமஞ்சனமெடுக்கக்குடமாட்டமணிகலசநல்லவாசம், பெ
றுந்தகையதூபக்காறீபக்கான்மணியின்னபிறவுங்கங்குற், றெறுங்க
திர்கான்மணிமாட மதுரைநாயகர்க்கீந்தோர்செய்தபாவம்; வெறுங்
துகள்செய்தைதம்பொறிக்கும் விருந்தூட்டுப் பெருங்காம வெள்ளத்
தாழ்வார். (உஅ)

கயலினையுங்கண்ணுமைகோன்றிருமுன்னர்ப்பல்லியமுங்கல்லெ
ன்றூர்ப்ப, வியலினையபாடலிசைடாடலினைவிப்போரிறுமாப்
பெய்தித், புலனினையவியங்கலிப்பழுவுலகுந்தாழுவரசாய்ப்பொல
ங்கொம்பாதுந்த, செயலினையவண்ணங்கனையா ராடரங்குகண்டின்பச்
செல்வத்தாழ்வார். (உக)

ஓருகாலட்டாங்கமுடன்பஞ்சாங்கமுடனுதலொண்செங்கால்வெ
ண், குருகாலுழலைத்தடஞ்சூழ்கூடலையகர்ப்பணிவோர்கோலொன்
றேழுச்சிப், பொருகாலின்வருபரித்தேர்மன்னவராயாவருந்தம்புடை

வந்தெய்தி, யிருகாலுந்தலைவருட வெக்காலுந்தமைவணங்க விருப்
பரன்றே. (சுo)

இத்தகையதிருவாலவாயுடையான்றிருமுன்னரியற்றுதோமம், மெய்
த்தவமந்திரந்தானமின்னவணுவளவெனினுமேருவாகு, முத்தமமா
மிவ்விலிங்கப்பெருமையெலாம் யாவரளந்துரைப்பர்வேத, வித்தக
ரேசிறிதறிந்தவாறுரைத்தேதமினிப்பலகால்விளம்புமாறென். (சுக)

இத்தலத்துக்கொப்பாகவொருதலமும்பொற்கமலமென்னுமிந்த, வு
த்தமமாதீர்த்தத்துக்கொப்பதொருதீர்த்தமுமெய்யுணர்வானந்த, வி
த்தனையவிலிங்கமிதற்கொப்பாவோரிலிங்கமும்பார்வின்மேலென்னு
முத்தலத்துமிலையந்தமூர்த்திதிருநாமங்கண்மொழியக்கேண்மின். ()

கருப்பூரசுந்தரன்பூங்கடம்பவனசுந்தரனுட்கரவாத்தொண்டர்
விருப்பூருங்கலியாணசுந்தரனல்லறவடிவாய்விளங்குமேற்றுப்
பொருப்பூருமபிராமசுந்தரன்றேன்புடைகவிழ்ப்பொன்னிற்பூத்த
மருப்பூசுசண்பகசுந்தரன்மகுடசுந்தரன்முன்வாழிமன்னே. (சுசு

மான்மதசுந்தரன்கொடியபழியஞ்சுசுந்தரனேர்மருங்கின்ஞானத்
தேன்மருவியுறைறசோமசுந்தரன்றேன்செவ்வழியாழ்செய்யப்பூத்த
கான்மருவுதடம்பொழில்சூழாலவாய்ச்சுந்தரன்மீன்கணங்கள்சூழட
பான்மதிசூழ்நான்மாடக்கூடலையகன்மதுராபதிக்குவேந்தன். (சுச

சிரநாலோன்பரவரியசடமட்டிவிச்சாபுரநாதன்சீவன்முத்தி
புரநாதன்பூவுலகசிவலோகாதிபன்கன்னிபுரோசன்யார்க்கும்
வரநாளுந்தருமூலவிலிங்கமெனவிளைவுமுதலாமாடக்கூட
லாணைமமின்னமளப்பிலவாகுமூலகுய்யவவ்விலிங்கம். (சுசு)

பாதாளமேழுருவமூலத்தெழுந்ததவ்விலிங்கப்படிவந்தன்னு
ளாதாரமாகவமர்ந்தறுபத்துநாலுவிளையாடல்செய்த [ருன்
போதானந்தன்பெருமைமங்குரவன்மொழிப்படியேபுகன்றருண்மன்
வேதாதிகலேதரிந்தமலயமுனிகேட்டறவோர்விளைதல்செய்தார்.

அருட்கடலேயிறைவிளையாட்டறுபத்துநான்கின்றுயலைவையற
னந்தப், பொருட்கடவுளைக்காலத்தியாவர்பொருட்டாடினனெம்
போதந்தேறித், தெருட்படரவர்ன்முறையாற்செப்புகனக்கரங்கு
வித்தார்தென்பால்வெற்பி, விருப்பவணும்விளையபடிக்கிறைநிரம்பத்
தொகுத்துவிரித்தியம்புகின்றனன். (சுன)

மூர்த்திவிசேடம் - முற்றிற்று.

ஆக படலம் - அ - க்கு திருவிருத்தம் - சுஉன.

திருவிளையாடற் றிரட்டு

பதிகம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வானவர்கோன்பழிதொலைத்தவிளையாட்டுங்காரிசாபமாயததவாறு
மீனவர்கோன்காடெறிந்துபுரங்கண்டபெருஞ்சிறப்புமீனகோக்கி
யானதடாத்தகையழல்வாயவதரித்துப்பாராண்டவருளுமீசன்
ரூனவளமணஞ்செய்துமுடிதரித்துமண்காத்ததனைமைப்பாடும். க

புலிமுனியும்பணிமுனியுந்தாழ்வெள்ளிமன்றுணைடம்புரிந்தவா
றும், வலிகெழுதோட்குண்டகட்டுக்குறட்கன்னக்குன்றளித்தவகை
யும்பின்னு, நலிபசிநோய்கெடவன்னக்குழியழைத்துக்கொடுத்துநீர்
நசைக்குவையை, யலைபுனல்கூயருத்தியதும் பொன்மாலைக்கெழுக
டலுமழைத்தவாறும். (உ)

அந்தார்கோனதனத்தி லுறைமலயத்துவசனமீண்டழைத்தவா றும்
ஞ், சுந்தரவுக்கிரகுமாரனவதரித்தவாறும்வளைசுடர்வேல்சென்று, த
ன்னதையிடத்தவன்பெற்றவாறுமவனவ்வடிவேல்சலதிவீறு, சிந்தவிடு
த்ததுமகவான்முடியையவளையெறிந்திறைவன்சிதைத்தவீறும். (ஊ)

பொன்னசலந்தனச்சென்டாற் புடைத்துநிதியெடுத்ததுவும்பு
னிதர்க்கீசன், பன்னரியமறைப்பொருளைப்பகர்ந்ததுவுமாணிக்கம்ப
கர்ந்தவாறுந், தொன்னகர்மேனீர்க்கிழவன் வரவிடுத்தகடல்சுவறத்
தொலைத்தவாறு, மன்னதனித்தொன்மதுரை நான்மாடக்கூடனக
ரானவாறும். (ச)

வட்டங்கொள்சடையுடையசித்தர்வினையாடியதேர்வனப்புங்கையி
ற், கட்டங்கந்தரித்தபிரான்கல்லாலினக்கரும்பருந்தக்காட்டுமாறு, மு
ட்டங்குவஞ்சனையாலமணர்விடுவாரணத்தைதயொழித்தவாறு, மிட்
டங்கொள்கௌரிமுளம்விருத்தனிளையோன்குழவியானவாறும். (ரு)

செய்யதாண்மாறிநடமாடியதும்பழியஞ்சுதிறலுந்தாயை
மையலாற்புணர்ந்தமகன்பாதகத்தைதமாற்றியதுமதியாதசான்
றையலாடனவிரும்புமாணவனவாளமரிற்றடிந்தவாறும்
பையராவெய்ததுவும்படிற்றமணர்விடுத்தபசுப்படுத்தவாறும். (சூ)

அறவேற்றுப்பரியுகைத்துமெய்க்காட்டுக்கொடுத்தவிளையாட்டுங்கா
ட்டுச், சுறவேற்றுக்கொடியரசன்றனக்குலவாக்கிழிகொடுத்ததொட
ர்புநாய்கர், நறவேற்றமலர்க்குழலார்மனங்கவர்ந்துவளைபகர்ந்தலனு
மாறு, மறவேற்கண்மாதராற்கட்டமாசித்தியுறமதித்தவாறும். (எ)

சென்னிபொருட்டெயில்வாயி றிறந்தடைத்துவிடைபொறித்த
செயலுஞ்சென்னி, மன்னிகவிட்டமர்வினைப்ப மீனவர்க்குநீர்ப்பந்

தர்வைத்தவாறும், பொன்னனையாள்பொருட்டிரதவாதவினைமுடித்ததுவும்புகார்க்குவேந்தன், றன்னையகன்குழிவீட்டிடத்தின்னவற்குமறவாகைதந்தவாறும். (அ)

மனக்கவலைகெடவுலவாக்கோட்டையடியார்க்களித்தவகையுமாம், னைனக்கருணைவடிவாகிவழக்குணைத்துப்பொருள்வணிகற்கீந்தவாறுந் சினக்கதிர்வேல்வரகுணற்குச்சிவலோகங்காட்டியதுந்திவவுக்கோலான், றனக்கடிமையெனவிறகுதிருமுடிமேற்சுமந்துபகைதணித்தவாறும். (கூ)

அப்பாணற்கிருந்தியஞ்சோறினிடைத்திருமுகமீந்தளித்தவாறுமப்பாணன்பாடமழையனையிரவிற்பொற்பலகையளித்தவாறுமப்பாணன்மனைவியிசைப்பங்கவெல்லவண்ணலைவையடைந்தவாறுமப்பாணரெனன்றிருமுலையருத்திப்பன்றியுயிரளித்தவாறும். ()

வயவேனக்குருவிளகளமந்தியனையாகையதுபயவையடுவோட்டுக்க
கபவாய்க்குக்குருமொழிவைத்தருளியதுநாணைக்குக்கருணைநாட்டங்
தயவால்வைத்தருண்முத்திநல்கியதுங்கூடனகர்தன்னைச்சித்தர்
புயநாகம்போய்வளைந்துதிருவாலவாயாக்கிப்போந்தவாறும். (கக)

சுந்தரனென்றெழுதியகூரம்பெய்துசெம்பியன்போர் தொலைத்தவாறுஞ், செந்தமிழோர்க்கியற்பலகையருளியதுந்தருமிக்குச்செம்பொன்பாடித், தந்ததுவுமாறுபதகீரற்குக்கனையேற்றந்தந்தவாறும், விந்தமடக்கியழுனியாற்கீரனியற்றமிழ்தெளியவிடுத்தவாறும். (கஉ)

ஊமனற்புலவரிகலகற்றியதுமிடைக்காடனுடன்போய்க்கொன்றை
தாமனிர்வடவாலவாயமர்ந்தபரிசும்வலைசலதிவீசிப் [த்
பூமனைய்க்குழலினையவேட்டருளியதுமுவாதவூர்ப்புனிதர்க்கேறத்
தேமனைண்மலரடிகண்முடிசூட்டியுபதேசஞ்செய்தவாறும். (கங)

நிகள்பரியாக்கியதும்பரிகணரியாக்கியதுநாகம்பூண்டோ
னரியதிருமேனியின்மேலடிசுமந்துமண்சுமந்தவருளுந்திதன்ன
னெரியதுவெஞ்சுரந்தணித்தவாறுமமணைாக்கழுவிலிட்டவாறுங்
கரியவிதனவன்னிகிணறிலிங்கங்கூய்வணிகமகட்காத்தவாறும். (கச)

னைத்தொகையாலறுபத்துநான்கவற்றைறுத்தமுறையிற்றிலா
த, வினைத்தொகையாறகன்றீரொக்காலமெவர்பொருட்டெனகீர்சி
னையவாற்றான், மனத்தளவிலன்புமடையுடைந்தொழுகத்திருவால
வாயான்றாளை, நினைத்தளவிலானந்தம் பெருகவிரித்துரைப்பலென
நெறியாற்கூறு (கஞ)

பதிகம் - முற்றிற்று.

ஆகப்படலம் - கூ-க்கு - திருவிருத்தம் - நசூ.

உ

சிவமயம்.

முதலாவது

இந்திரன் பழி தீர்த்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்பயில்குலிசப்புத்தேள்விருத்திராசுரனைக்கொன்ற
வன்பழிவிடாதுபற்றக்கடம்பமாவனத்திலெய்தி
யென்பரவாரம்பூண்டவிறைவனையருச்சித்தேத்தித்
தின்பதுகழிந்துபெற்றபேற்றினையெடுத்துச்சொல்வாம். (க)

முன்னதாமுகத்தில்வண்டுமூசுமந்தாரந்தீழற்
பொன்னவிர்சுணங்குண்கொங்கைப் புலோமிசைமணாளன்பொற்பூ
மின்னவிர்த்திணைப்பச்சிங்கஞ்சுமந்தமெல்லணைமேன்மேவி [ண்
ணன்னமென்னடையாராதுமாடன்மேலார்வம்வைத்தான். (உ)

மூவகைமலருந்தூத்துவண்டுளைமுழங்கத்தெய்வப்
பூவலர்கொடிபோற்றன்னபொன்னனார்கூத்துமன்னர்
காவலராமுதமன்னபாடலுகாகநாட்டுக்
காவலன்கண்டுகேட்டுக்களிமதுக்கடவிலாழ்ந்தான். (ங)

பையராவணிந்தவேணிப்பகவனேயனையதங்க
ளையனும்வியாழப்புத்தேளாயிடையடைந்தாரைகச்
செய்யதாள்வழிபாடின்றித்தேவர்கோனிருந்தானந்தோ
தையலார்மயலிற்பட்டோர்தமக்கொருமதியுண்டாமோ. (ச)

ஓல்லெனக்குரவனேகவும்பர்கோன்றிருவிணக்கம்
புல்லெனச்சிறிதுகுன்றப்புரந்தானறிந்திக்கேடு
நல்லதால்குரவற்பேணுநவையிலுல்விளந்ததென்ன
வல்லலுற்றறிவன்றன்னைத்தேடுவானுயிர்ஞனே. (ஞ)

அங்கவனிருக்கைபுக்கான்கண்டுலனவித்தபாசப்
புங்கவருலகமேனோர்பதவியும்புவனமூன்றி
லெங்கணுந்துருவிக்காணனெங்குற்றான்குரவனென்னுந்
சங்கைகொண்மனத்தனுகிச்சதுமுகனிருக்கைசார்ந்தான். (ட)

துருவினனங்குங்காணன் றிசைமுகற்றொழுதுதாழ்ந்து
பரவிமுன்பட்டவெல்லாம் பகர்ந்தனன்பகரக்கேட்டுக்
குரவினையிகழ்ந்தபாவங்கொழுந்துபட்டருந்துஞ்செவ்வி
வருவதுநோக்கிச்சூழ்ந்துமலர்மகனிதனைச்சொன்னான். (ன)

அனையதொல்குரவற்காணுமளவுநீதுவட்டாவீன்ற
தனையன்முச்சென்னியுள்ளான்முனவர்குலத்தில்வந்தும்
வினையிலைலறிவான்மேலான்விச்சுவவுருவனென்னு
மினையனைக்குருவாக்கோடியென்னலுமதற்குநேர்ந்தான். (அ)

அழலவிர்ந்தனையசெங்கேழுதிக்கிதழ்முளரிவாழ்க்கைத்
தொழுதகுசெம்மறன்னைத்தொழுதுமீண்டகன்றுநீங்கா
விழைதகுகாதல்கூரவிச்சுவவுருவன்றன்னை
வழிபடுகுருவாக்கொண்டான்மலர்மகன்சூழ்ச்சிதேறான். (சு)

கைதவக்குரவன்மாயங்கருதிலன்வேள்வியொன்று
செய்திடலடிகளென்னத்தேவர்கட்காக்கங்கூறி
வெய்தழல்வளர்ப்பானுள்ளம்வேறுபட்டவுணர்க்கெல்லா
மெய்திறனினைந்துவேட்டான்றனக்குமேலுறுவதோரான், (க0)

வாக்கினன்மனத்தால்வெறுப்மகஞ்செய்வான்செயலையாக்கை
நோக்கினனேனுதிதன்னைநேக்கினன்குவிசவேலாற்
றாக்கினன்றலைகண்மூன்றுந்தனித்தனிப்பறவையாகப்
போக்கினனலகைவாயிற்புகட்டினன்புலவுச்சோரி. (கக)

தெற்றெனப்பிரமபாவஞ்சிறிவந்தமோர்வேந்தைப்
பற்றலுமதனைத்தீர்ப்பான்பண்ணவர்மரமேன்மண்மேற்
பொற்றொடியார்மேனீர்மேல்வேண்டினர்புகுத்தலோடு
மற்றவரிஃதியாந்தீர்க்கும்வண்ணம்யாதென்னவின்னோர். (கஉ)

அப்பினைதுணையாய்மண்ணிலருவருப்புவராயம்பொற்
செப்பிளங்கொங்கையார்பாற்றீண்டுதற்கரியபூப்பாய்க்
கப்பினர்மரத்திற்காலும்பயினதாய்க்கழிகவென்றூ
ரிப்பழிசுமந்தவெங்கட்கென்னலுமென்றூர்பின்னும். (கஊ)

மேற்படி - வேறு.

கருவின்மாதர்கருவுயிர்க்குமளவுமுறையாற்கணவர்தோண்
மருவிவாழ்கமண்ணகழ்ந்தகுழியுமதலைவதுவொழிக
பொருவினீருமிறைதோறுழுறிப்பொலிகமரங்குறைபட்
டொருவினுலுந்தழுகவெனவிவாழிபாநலனுழுதவிர். (கச)

மாசிற்கழிந்தமணியேபோல்வந்தபழிதீர்ந்திந்திரனுங்
தேசிற்றிகழத்துவட்டாதன்செல்வன்றன்னைத்தேவர்பிரான்
வீசிக்குலிசத்துயிருண்டவிழுமங்கேட்டுவெகுண்டுயிர்த்துக்
கூசிப்பழிகோள்கருதியொருகொடியவேள்விகடிதமைத்தான். கஙி

அந்தக்குண்டத்திதரிசிகைபோலழலுங்குஞ்சியண்டமுக
டுந்தக்கொடியதூமம்போலுயிர்த்துச்செங்கண்சினச்சிந்தீச்
சிந்தப்பிறைவாளெயிறதுக்கித்திசைவான்செவிடுபடநகைத்து
வந்தக்கொடியவிடம்போலவெழுந்தானெருவாண்மறவீரனை. (ககூ)

கலிவிருத்தம்.

ஈங்குவன்விருத்திரனென்பவாரழற்
றூங்குவன்கணைவிடுதூரநீண்டநீண்
டோங்குவதேனுங்குதற்கொப்பவைகலும்
வீங்குவன்றனிலராவினையினென்பவே. (கஎ)

மீங்குடல்விருத்திரன்றன்னைவின்னைவ
ரோங்குறவருதுவட்டாவெனும்பெயர்த்
தீங்குறுமனத்திதேனென்றேறவர்கோனுயிர்
வாங்குதிபொருதெனவரவிட்டானரோ. (கஅ)

மதித்துணியையிற்றிதேனென்வடவைபோற்சினேதிக்
கொதித்திதிர்குறுகினென்கொண்டலார்தியு
மெதிர்த்தனண்களிற்றின்மேலிமயத்துச்சிமே
லுதித்தகேதார்கருங்கதிரொக்குமன்னவே. (கசு)

அறத்திதாடபாவமோர்ந்தென்னவர்த்திரு
நிறத்தருளூண்டமர்செய்பக்கற்சிறை
குறைத்தவன்றகுவன்மேற்குலிசவேலெடுத்
துறைத்திடவீசினனுடன்றுகள்வனும். (உ0)

இடித்தனன்னையிலோரிருப்புலக்கையைப்
பிடித்தனன்வலனெனப்பெயர்த்துதீயனத்
துடித்தனன்சினமூலச்சுவடுதோய்புயத்
தடித்தனனிந்திரனவசமாயினன். (உக)

அண்டமோறனையவனவசமாறிப்பின்
கண்டகன்னைகதவங்கினந்திக்கள்வனேர்
மண்டமராற்றுவான்வலியிலோமெனப்
புண்டரீகத்தவனுலகிற்போயினன். (உஉ)

தாழ்ந்துதான்படுதுயர்விளம்பத்தாமரை
வாழ்ந்தவன்வலாரியோடணைந்துமாமகள்
வீழ்ந்தமார்பினனடிவீழ்ந்துசெப்பமால்
சூழ்ந்துவாளுடனேநோக்கிச்சொல்லுவான்.

ஆற்றவும்பழைய துன்னங்கைவச்சிர
மாற்றவருயிருணவலியின்றுதலால்
வேற்றுருபுதியதுவேண்டுமாலினிச்
சாற்றுதுமதுபெறுந்தகைமைகேட்டியால்.

தொடையகன்மார்பநாந்தூயபாற்கடல்
கடையுநாளசுரருஞ்சுரருங்கையில்வெம்
படையொடுமடையன்மின்பழுதென்றப்படை
யடையவுந்தீசிபாலடைவித்தாமரோ.

சேட்படுநாணனிசெல்லத்தேவரா
வாட்படையவுணராவந்துகேட்டிலர்
ஞாட்படைபடையெலாஞானநோக்கினல்
வேட்படைவென்றவன்விழுங்கினனரோ.

விழுங்கியபடையெலாம்வேறறத்திரண்
டொழுங்கியதான்முதுகந்தண்டொன்றியே
யெழுங்கதிர்க்குலிசமாமிதனையெய்துமுன்
வழுங்குவன்கருணையோர்வடிவமாயினன்.

மேற்படி - வேறு.

என்றுமாதவனியம்பவும்பர்கோ
னென்றும்வானவர்தம்மொடொல்லெனச்
சென்றுமாயையின்செயலைநோன்பினல்
வென்றமாதவனிருக்கைமேவினன்.

மேற்படி - வேறு.

அகமலர்ந்தருந்தவனமரர்க்கன்புகூர்
முகமலர்ந்தின்னுமுகமன்கூறினீர்
மிகமெலிந்தெய்தினீர்விளைந்ததியாதது
தகமொழிந்திடலெனவலாரிசாற்றுவான்.

அடிகணீர்மறுதலதான்றதனைவேண்டியும்
முடிகொள்வானவரொடுமுந்தினேனது
செடிகொள்காரிருளுடலவுணர்த்தெய்த்தெமர்
குடியெலாம்புரப்பதோர்கொள்கைத்தாயது.

யாதெனினினைய துண்யாக்கையுள்ளதென்
றேதலும்யாவையுமுணர்ந்தமாதவ
னதவற்கண்டதாமனையினனனப்
போதலர்ந்தின்னனபுகல்வதாயினன்.

நாய்நமதெனநரிநமதெனப்பிதா
தாய்நமதெனநமன்றனதெனப்பினி
பேய்நமதெனமனமதிக்கும்பெற்றிபோ
லாய்நமதெனப்படும்யாக்கையாரதே. (நஉ)

விடம்பயிலெயிற்றரவுரியும்வீநுழை
குடம்பையுந்தானெனுங்கொள்கைத்தேகொலா
நடம்பயில்கூத்தினடிக்குமைவர்வா
முடம்பையும்யானெனவுணைக்கற்பாலதோ. (நஊ)

நுத்தயாவிலார்தமைநலியத்துன்பமோ
யுதத்தயாவருந்திருவடையயாக்கையைக்
கொதித்தயாவறம்புகழ்கொள்வனேயெனி
னெதித்தயாக்கையின்பயனிதனின்யாவதே. (நஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

னன்றனன்காணைமான்றியெழுகருத்தறிவையீர்ப்ப
ரின்றனன்பிரமகாடிநெறிகொடுகபாலங்கீண்டு
சென்றனன்விமானமேறிச்சேர்ந்தனனுலகைநோன்பால
வென்றனன்றுறக்கம்புக்குவீற்றினிதிருந்தானம்மா. (நஏ)

அம்முனிவள்ளலீந்தவடுபடைமுதுகந்தண்டைத்
தெம்முனையடுபோர்சாய்க்குந்திறல்கெழுகுலிசஞ்செய்து
கம்மியப்புலவனைக்கங்கணாந்துகைகொடுப்பவாங்கி
மைம்முகிலூர்தியேந்திமின்விடுமழைபோனின்றான். (நஐ)

மறுத்தவாவஞ்சப்போரால்வஞ்சித்துவென்றுபோன
கறுத்தவாளவுணற்கொல்வான்கடும்பரிநெடுந்தேர்தூழல்
வெறுத்தமால்யானைமள்ளர்வேலபுக்கெழுந்துகுன்ற
மறுத்தவானவர்கோனந்தவவுணர்கோமகனைச்சூழ்ந்தான். (நன)

வானவர்சேனைமூண்டவளைத்தலும்வடவைச்செந்தீ
யானதுவனையிலேனுங்கியழன்றுருத்தெழுந்தாலென்னத்
தானவர்கோனுமானந்தலைக்கொளவெழுந்துபொங்கிச்
சேனையுந்தானுமூண்டுசீறினின்றடிபோர்செய்வான். (நஒ)

அடுத்தனரிடியேறென்னவார்த்தனராக்கங்கூறி
யெடுத்தனர்கையிற்சாபமெறிந்தனர்சிறுகாலேறை
தொடுத்தனர்மீளிவாளிதூர்த்தனர்குந்தகேமி
விடுத்தனர்வாளேர்சேனவீரர்மேலவுணவீரர். (சுஏ)

கிட்டினர்கடகக்கையாற்கினர்வளையனையதிண்டோள்
கொட்டினர்சாரிமாறிக்குதித்தனர்பலகைகீட்டி
மூட்டினரண்டகூடம்விள்ளமுழங்கினர்வடிவாளொச்சி
வெட்டினரவுணச்சேனவீரனைவானவீரர். (சஅ0)

வீழ்ந்தனர்தோளுந்தாளுஞ்விண்டனர்சோரிவெள்ளத்
தாழ்ந்தனர்போருந்தாருமகன்றனரகன்றமார்பம்
போழ்ந்தனர்சிரங்களெங்கும்புரண்டனர்கூற்றூர்புக்கு
வாழ்ந்தனரெனபோராற்றிவந்தசகன்சேனமள்ளர். (சஅக)

தாளொடுகழலுமற்றூர்தலையொடுமுடியுமற்றூர்
தோளொடுவீரமற்றூர்தும்பையோடமருமற்றூர்
வாளொடுகரமுமற்றூர்மார்பொடுகவசமற்றூர்
கோளொடுமாண்மையற்றூர்குறைபடக்குறையாமெய்யர். (சஅஉ)

தொக்கனகழுகுசென்றுசோரிகுடர்பிதுங்கியீர்ப்ப
வுக்கனகுருதிமாந்தியொட்டல்வாய்நெட்டைப்பேய்க
ணக்கனபாடல்செய்யநாட்பிணைக்கவந்தமாடப்
புக்கனபிணந்தின்குன்றம்புனைதற்தபார்சிதைந்ததண்டம். (சஅங)

இவ்வகைமயங்கிப்போர்செய்திறற்தவரொழியப்பின்னுங்
கைவ்வகையதுபோராற்றிக்கனையிறற்தார்கண்மாண்டா
ரவ்வகையறிந்துவானத்தசனுமவுணர்வேந்துந்
தெய்வதப்பண்டகள்வீசிச்சீறின்றதுபோர்செய்வார். (சஅச)

அனற்படைவிடுத்தான்விண்மேணராண்டகையதனைக்கள்வன்
புனற்படைவிடுத்துச்சிற்தத்துணித்தனன்புனிதன்காற்றின்
மூனைப்படைவிடுத்தான்வெய்யோன்முழங்குகால்விழுங்குநாகச்
சினப்படைதொடுத்துவீசிவிலக்கினன்றேவராஞ்ச. (சஅஞ)

நாகமாப்படைவிட்டார்த்தானைகர்கோனுவணச்செல்வன்
வேகமாப்படையைவீசிவிலக்கினன்றகுவர்வேந்தன்
மோகமாப்படையைத்தொட்டுமுடுக்கினன்மூனவனன்ன
தேகமாப்படிறன்ஞானப்படைவிடுத்திருள்போனின்றான். (சஆ0)

மட்டிடுதாரான்விட்டவானவப்பணைக்குமாறு
விட்டுடன்விலக்கிவேறும்விடுத்திடக்கணன்றுவஞ்சன்
முட்டிடமானவெங்கான்மூட்டிடக்கோபச்சொற்தீச்
சுட்டிடப்பொறுதுபொங்கிச்சராதிபனிதனைச்செய்தானே. (சவ)

வீங்குருளாதுங்கமேகமின்விதிர்த்தெனக்கையி
லோங்குருங்குஞ்சிவேலையொல்லெனவிதிர்த்தலோடுந்
தீங்குளம்போன்றிருண்டதிணியுடற்கள்வனுஞ்சி
வாங்குருங்கடல்வீழ்ந்தான்மறைந்தமைமாகமொத்தான். (சஎ)

ஒக்கவிந்திரனும்வீழ்ந்தாலுடல்சினவுருமேறன்னான்
புக்கிடந்தேடிக்காணான்புண்ணியமுளாரியண்ணல்
பக்கம்வந்தனையசெய்திடகர்ந்தனன்பதகன்மாளத்
தக்கதோர்சூழ்ச்சிமுன்னிச்சராசரமீன்றதாதை. (சக)

விந்தவெற்படக்கினர்க்கீதுனையெனவிடுப்பமீண்டு
சந்தவெற்பணைந்தான்வானேர்தலைவனைமுகமன்கூறிப்
பந்தவெற்பறுத்தான்வந்ததவனைப்பறைகளெல்லாஞ்
சிந்தவெற்பறுத்தான்வந்தசெயலெலாமுறையாற்செப்ப. (கூ0)

யாவையுமுணர்ந்தவெந்தைக்கியானெடுத்துணர்த்துகின்ற.
தாவதென்னைமருக்காற்றுதாழிபுக்கொளித்தாலுவி
வீவதுமவலில்வந்தவிழுமமோவெல்லாமின்று
போவதுங்கருதிநுப்பாற்புகுந்தனமடிகளென்றான். (கக)

என்றவனிடுக்கண்டீர்ப்பானிகல்புரிபுலன்களைந்தும்
வென்றவனெடியோன்றன்னைவிடையவன்வடிவமாக்கி
நின்றவனறிவானந்தமெய்மையாய்நிறைந்தவெள்ளி
மன்றவனூழிச்செந்தீவடிவினைமனத்துட்கொண்டான். (கஉ)

கைதவன்கரந்துவைகுங்கடலெவற்படக்குங்கையிற்
பெய்துழுந்தெல்லைத்தாக்கிப்பருகினன்பிறைசேர்சென்னி
யையனதருளைப்பெற்றுர்க்கதிசயமிதென்கொன்றூன்று
மெய்யழுத்தொழிலுஞ்செய்யவல்லவரவரோயன்றே. (கங)

அறந்துறந்தீட்டுவார்தமரும்பெறற்செல்வம்போல
வுறந்தனபடுநீர்ப்பௌவம்வடவைகட்புலப்பட்டாங்கு
நிறந்தசெம்மணியுமத்தீண்டெரிசினையேபோனீண்டு
சிறந்தழுபவளக்காடுந்தினியிருள்விழுங்கிற்றம்மா. (கச)

பணிகளின்மகுடகோடிப்பரப்பெனவிளங்கிப்பல்கா
சணிகலப்பேழைபேழ்வாய்திறந்தனைத்தாகியொன்பான்
மணிகிடந்திமைக்குநீரான்மகபதிவேள்விக்காவாய்த்...
தினியுடலவுணன்பட்டசெங்களமனையதன்றே. (நந)

வறந்தநீர்தன்னின்மின்னுவாள்விதிர்த்தென்னப்பன்மீ
னெறிந்தனரெனிந்தநாகமிமைத்தனவலையுழுத்துஞ்
செறிந்தனகரந்தயாமைசேர்ந்தபல்பண்டஞ்சிந்தி
மூறிந்தனவங்கங்கங்கமுக்கினசிறுமீனெல்லாம். (நக)

செருவினிலுடைந்துபோனசெங்கண்வாளவுணனங்கோ
ரருவனைமுதுகிற்கார்போலடைந்துவாளுடர்செய்த
வுருகெழுபாவந்தானேனுருவெடுத்திருந்துநோற்கும்
பரிசனநோற்றுனின்னம்பரிபவவினைவுபாரான். நன)

கைதவநோன்புநோற்குங்கள்வனைக்கண்டுவானேர்
செய்தவமனையான்யாணர்வச்சிரஞ்சீரிப்பான்போற்
பொய்தவன்றலையைக்கொய்தான்புனரிவாய்நிறையச்சோரி
பெய்தகுவலாரிதன்னைப்பிடித்ததுபிரமசாலை. (நஎ)

உம்மெனுமார்பைத்தட்டுமுருத்தெழுமதிர்க்கும்போர்க்கு
வம்மெனும்வாய்மடிக்கும்வாளெயிறதுக்கும்வீழுங்
கொம்மெனவோடுமீளுங்கொதித்தழுஞ்சிரிக்குஞ்சீறு
மிம்மெனுமளவுநீங்காதென்செய்வானஞ்சினானே. (நஙூ)

வினைந்தரன்றிசையோர்வாவிவீழ்ந்தொருகமலநூலுட்
கரந்தனன்மகவானிப்பாற்கற்பகநாடுபுல்லென்
றிருந்தகாலிருக்குமெல்லையிம்பரினுடனென்போ
னரும்பரிமேதவேள்வியாற்றினனற்றுமெல்லை. (சூ0)

அரசிலாவறுமைநோக்கியவனைவாளுடர்யாரும்
வினைசெய்தார்மகுடஞ்சூட்டிவேந்தனைக்கொண்டார்வேந்தாய்
வருபவன்சினையீண்டுத்தருகெனமருங்குளார்போய்த்
திரைசெய்கீரமுதளட்குச்செப்பவக்கற்பின்மிக்காள். (சூக)

பொன்னுயிர்த்தனையகாட்சிப்புண்ணியக்குரவன்முன்போய்
மின்னுயிர்த்தனையாணின்றுவிளம்புவாளிதன்கொல்கெட்டே
னென்னுயிர்த்துணைவனுங்கேயிருக்கமற்றொருவனென்னைத்
தன்னுயிர்த்துணையாக்கொள்கைதருமமோவடிகளென்றுள். (சூஉ)

மாதவமொழுவர்தாங்கமாமணிச்சிவிகைமீது
போதரினவனேவாரேர்புரந்தரனவனேயுன்றன்
காதலனுகுமென்முன்னைகிதாழுதற்குநேர்ந்தம்
மேதகுசிறப்பாலிங்குவருகெனவிடித்தாதே து. (சுஙட)

மனிதரின்மகவாணகிவருப்வன்சிவிகைதாங்கும்
புனிதமாதவனையெண்ணன்புன்கணேணய்விளவும்பாரான்
கனிதருகாமந்துய்க்குங்காதலால்வினையச்செல்வா
னினிதயிராணிபாற்கொண்டேகுமின் * சர்ப்பவென்றான். (சுசு)

சர்ப்பமாகனமுற்கொம்புதாங்கிமுன்னடக்குந்தன்றல்
வெற்பனமுனிவன்சாபம்விளத்தனன்விளத்தலோடும்
பொற்பமாசுணமேயாகிப்போயினனறிவிலாத
வற்பரானவர்க்குச்செல்வமல்லதுபகைவேறுண்டோ. சுஞ)

பின்னர்தங்குரவனனபிரானடிபணிந்துவாரேர்
பொன்னகர்வேந்தனின்றிப்புலம்படைகின்றனைதய
வென்னலுங்குரவன்போயவ்விலஞ்சியுளொளித்தாற்கூவி
தன்னுனையறிந்துபோந்தசதமகற்கொண்டுமீண்டான். (சுசூ)

கொடும்பழிகோட்பட்டான்றன்குரவனவணங்கியென்னைச்
சுடும்பழிகழிவதெந்நன்சொல்லெனத்தாலவதோர்ந்தா
னடும்பழிமண்மேலன்றியருதுநீவேட்டைக்கென்னப்
படும்பழியிதனைத்தீர்ப்பான்பார்மிசைவருதியென்றான். (சுஎ)

ஈசனுக்கிழைத்தகுற்றந்தேசிகனெண்ணித்தீர்க்குந்
தேசிகற்கிழைத்தகுற்றங்குரவனேதீர்ப்பதன்றிப்
பேசுவதெவனேதன்பாற்பிழைத்தகாரணத்தால்வந்த
வாசவன்பழியைத்தீர்ப்பான்குரவனேவழியுங்கூற. (சுஅ)

வாம்பரியுகைத்துத்தன்னல்வழிபடுகுரவன்வாரேர்
தாம்பரிவோடுஞ்சூழத்தராதலத்திழிந்துசெம்பொற்
காம்பரிதோளிபங்கன்கயிலைமால்வரையைத்தாழ்ந்து
தேம்பரியலங்கன்மார்பன்றென்றிசைநோக்கிச்செல்வான். (சுகூ)

மேற்படி வேறு.

கங்கைமுதலளவிறந்ததீர்த்தமெல்லாம்போய்ப்படிந்துகாசிகாஞ்சி
பங் ○ கனகதாரமுதற்பதிகள்பலபணிந்துமவுணற்கொன்ற

ர்ப்ப - வினைந்துகடக்கவேவுதல். ○ அனகம் - பாபமில்லாமை.

பொங்குபழிவிடாதழுங்கியராவுண்ணமாசுண்டுபொலிவுமாழ்குந்
திங்களனையான்கடம்பவனத்தெல்லையணித்தாகச்செல்லுமேல்லை

தொடுத்தபழிவேறுகிவிடுத்தகன்றதிந்திரலோ புரமனையந்தபாரம்,
விடுத்தவலைத்தளவிறந்தமகிழ்வெய்திக்தேசிகன்பால்விளம்பப்பா
சங், கெடுத்தவன்மாதலம்புனிததீர்த்தமுளதிவணமக்குக் கிடைத்
தல்வேண்டு, மடுத்தறிகவெனச்சிலனாவிடுத்தவ் வேறுநிலைன்ற
ப்பாற்செல்வான். (எக)

அருவிபடிந்தருவியெறிமணியெடுத்துப்பாறையிலிட்டருவிநீர்
தூய்க், கருவிரல்கொய்தலர்சூட்டிக் கனியூட்டிவழிபடுவ கல்லாமங்
கி, யொருதுறையில்யாளிகரிபுழைக்கை முகந்தான்றற்கொன்றூ
ட்டியூட்டிப், பருகுவனபுலிமுலைப்பால் புல்வாய்க்கன்றருத்தியிடும்
பசிதோய்தீர. (எஉ)

நெளியாக்குருளைவெயில்வெள்ளிடையிற்கிடந்துயங்கிநெளிய
ப்புள்ளே, றெளியறுச்சிறைவிரித்துநிழல்பரப்பப்பறவைநோயுற்ற
தேகொ, லளியவாவச்சோவென்றேதியயன்மடமந்தியருவியூற்றுங்,
துளியநீர்வளைத்தசும்பின் முகந்ததுத்துக்கருங்கையிறற் சொரிவ
மாதோ. (எங)

படவரவமணியீன்றுநொச்சிப்பாசிலையன்னைபந்தாண்மஞ்ஞை
பெடைதழுவிமணஞ்செய்ய மணவறையில்விளக்கிடுவ பெருந்தண்
கானத், தடர்சிறைமென்குயிலோமென்றூர்ப்பமடக்கிள்ளையெழுத்
தைந்துமோசைத், தொடர்புபெற்வுச்சரிப்பக்குருமொழிகேட்டாங்
குவப்பதொடிக்கட்பூவை. (எச)

இன்னவிலங்கொதுள்ளின்செயற்கியசெயலீரைக்கியிறும்பூதெ
ய்திப், பொன்னகரான்புளகமுடல் புதைப்பநிறைமகிழ்ச்சியுளம்பு
தைப்பப்போவா, னன்னபொழுதாற்றுவர்மீண்டடிவணங்கியின்
சுவைப்பா லருந்துவான்முன், பின்னரியதென்தொரிக்காங்குவகை
மேற்பேருவகை பெருகச்சொல்வார். (எஇ)

எப்புவனத்திலுமென்றுங்கண்டறியாவதிசயமுமென்னுனைக்கெய்
காத், திப்பியமுமிக்கடம்பவனத்தின்றுகண்டுவகைதினைத்தேதமங்க
ண், வைப்பனையவொருபுனிதவாவிமருங்கொருகடம்ப வனத்தினீ

எறுழிலையென்பது - இடபக்குன்று.

ழு, லொப்பிலொளியாய்முளைத்தசிவலிங்கமொன்றுளதென்றுணைப் பக்கேட்டான். (எசு)

செவித்துளையிலமுதொழுக்குமுழையவொடும்வழிக்கொண்டு சென்னிமேற்கை, குவித்துளமெய்மொழிகாணங்குணமூன்றுமொன்றித்தன்கொடியபாச, மவித்துளயர்வொழிக்கமுளைத்தருள்குறி மேலன்பீர்ப்பவடைவான்கானங், கவித்துளபூந்தடம்படிந்துகடம் பவனத்துழைநுழைந்தான்கவலைதீர்வான். (எஎ)

அருவாகியுருவாகியருவுருவங்கடந்துண்மையறிவானந்த, வுரு வாகியளவிறந்தவுயிராகியவ்வுயிர்க்கோருணர்வாய்ப்பூவின், மருவா கிச்சராசரங்களகிலமுந்தன்னிடையுதித்துமடங்கின்ற,கருவாகிமு ளைத்தசிவக்கொழுந்தையாயிரங்கண்ணுங்களிப்பக்கண்டான். (எஅ)

கண்டுவிழுந்தெழுந்துவிழிதுளிப்பவெழுகளிப்பென்னுங்கடலி லாழ்ந்து,விண்டுமொழிதழுதழுப்பவுடல்பனிப்பவன்புருவாய்வின்ணு ணேர்வேந்த, னண்டர்பிரானருச்சனைக்குவேண்டுமுபகரணமெலா மகல்வானெய்திக்,கொண்டுவரச்சிலனாவிடுத்தவோகப்பின்னுமொ ருகுறைவுதீர்ப்பான். (எக)

தங்குடிமைத்தச்சனையோர்விமானமமைத்திடவிடுத்தத்தடத் தின்பாற்போ, யங்கணனைக்கடிதருச்சித் திடாறியமலர்கிடையாதயர் வானந்தச், சங்கெறிதண்டிரைத்தடத்திலானருளாற்பல்பருதிசலதி யொன்றிற், பொங்குகதிர்பரப்பிமுளைத்தாலென்னப்பொற்கமலம் பூப்பக்கண்டான். (அ0)

அன்புதலைசிறப்பமகிழ்ந்தாடிலுன்காரணத்தாலதற்குநாம, மென்பதுபொற்றுமனையென்றேழுலகும் பொலிகவென விசைத்துப்பி ன்னு, மின்பதுமத்தடங்குடைந்து பொற்கமலங்கொய்தெடுத்து மீ ண்டுநீங்காத், தன்பினிதோய்தணியமுளைத்தெழுந்தமுழுமுதன்ம ருந்தின்றன்பால்வந்து. (அக)

மொய்த்தபுனக்காடெறிந்துநிலந்திருத்திவருமளவின்முளைத்த ஞான, வித்தனையசிவக்கொழுந்தின்றிருமுடிமேற்பரிதிகரமெல்ல த்தீண்டச், சித்தமெகிழ்ந்திந்திரன்றன்வெண்கவிகைத்திங்கணிழல் செய்வானுள்ளம், வைத்தனைப்போதிரவிமண்டலம்போலிழிந்த தொருமணிவிமானம். (அஉ)

கிரியெட்டுமெனமழையைக்கிழித்தெட்டும்புழைக்கைமதிக்கீற் றுக்கோட்டுக், கரியெட்டுஞ்சினமடங்கனிலெட்டுமெட்டெட்டுக்க

ணமுந்தாங்க, விரியெட்டுத்திசைபரப்பமயனிருமித்துதவியவவ்வி
மானஞ்சாத்தி, யரியெட்டுத்திருவுருவுமுவப்பரஞ்சுடனையருச்சிப்பா
யினனே. (அந)

முந்தவமருலகடைந்துபூசனைக்குவேண்டுவனமுழுதுந்தேர்வார்
வந்துதருவைவந்தீன்றபொன்னைடை மின்னுமிழுமணிப்பூண்வாசச்
சந்தனமந்தாகினிமஞ்சனந்தூமந்திருப்பள்ளித்தாமந்தீப
மந்தமிலானந்துநறுங்கனிதீந்தேன்றிருவமுதமனைத்துந்தந்தார்.

தெய்வத்தாமமைமுளைத்த தடம்படிந்துபவந்தொலைக்குந்திருநீ
றுடிச்,சைவத்தாழ்வடந்தாங்கியன்புருவாயருளுருவந்தாணைத்தே
ன்றும், பைவைத்தாடரவார்த்தபசுபதியையவனுனைத்தபனுவலாற்
றின், மெய்வைத்தாதரம்பெருக வருச்சனைசெய்தானந்த வெள்ளத்
தாழ்ந்தான். (அஞ)

பாராரவட்டாங்கபஞ்சாங்கவிதிமுறையாற்பணிந்துள்வாய்மெய்
நேராகச்சூழ்ந்துடலங்கம்பித்துக்கும்பிட்டுநிருத்தஞ்செய்து
தாராருந்தொடைமிதப்பவானந்தக்கண்ணருவிதுதும்பின்றன்
பாராமைமீக்கொள்ளவுஞ்சலித்துத்துதிக்கின்றனமரர்கோமான்.

மேற்படி - வேறு.

அங்கணைபோற்றிவாய்மையாரணைபோற்றிநாக
கங்கணைபோற்றிமூலகாரணைபோற்றிநெற்றிச்
செங்கணைபோற்றியாதிசிவபரஞ்சுடரேபோற்றி
யெங்கணையகனேபோற்றியீறிலாமுதலேபோற்றி. அள்)

யாவையும்படைப்பாய்போற்றியாவையுந்துடைப்பாய்போற்றி
யாவையுமாளுய்போற்றியாவையுமல்லாய்போற்றி
யாவையுமறிந்தாய்போற்றியாவையுமறந்தாய்போற்றி
யாவையும்புணர்ந்தாய்போற்றியாவையும்பிரிந்தாய்போற்றி. (அஅ)

இடருறப்பினித்தவிந்தப்பழியினின்றென்னையீர்த்துன்
னடியினைக்கன்பளைக்குமருட்கடல்போற்றிசேற்கண்
மடவரன்மனைளபோற்றிகடம்பமாவனத்தாய்போற்றி
சுடர்விடுவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி. (அக)

பூசையும்பூசைக்கேற்றபொருள்களும்பூசைசெய்யு
நேசனும்பூசைகொண்டுநியதியிற்பேறுநல்கு
மீசனுமாகிப்பூசையான்செய்தேனனுமென்போத
வாசனைபதுவுமானமறைமுதலடிகள்போற்றி. (கo)

இந்திரன் பழிதீர்த்தபடலம்.

என்னநின்றேறத்திணையின்னகைசிறிதுதேதான்ற
முன்னவனடியாளொண்ணமுடிப்பவனருட்கேணைக்கா
லுன்னதுவேட்கையாதிங்குனையெனவினையத்தாழ்ந்து
சென்னிமேற்செங்கைகூப்பித்தேவர்கோனிதனைவேண்டும். (கக)

ஐயநின்னிருக்கையல்லக்கணியணமளவினீங்கா
வெய்யவென்பழியிதேதுமேலநாளடியேன்செய்த
மையல்வல்வினையுமாய்ந்துன்மலரடிவழுத்திப்பூசை
செய்யவுமுரியனானென்சிறந்தபேறிதன்மேல்யாதோ. (கஉ)

இன்னநின்பாதப்போதே யிவ்வாறேயென்றும்பூசித்
துன்னடியாருள்யானு மோரடித்தொண்டனேவே
னன்னதேயடியேன்வேண்டத் தக்கதுன்றடியில்வீழ்ந்த
மன்னவன்றனக்குமுக்கண் வரதனுங்கருணைபூத்து. (கங)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

இருதுவிற்சிறந்த வேனிலுமதியா றிரண்டினிற்சிறந்தவான்றகரும்,
பொருவிறூரகையிற்சிறந்தசித்திரையுந்திதியினிற்சிறந்தபூரணையும்,
ருவுசித்திரையிற்சித்திரைதோறும்வந்துவந்தருச்சியோர்வருடந்,தெ
ரியுநான்முந்நூற்றறுபதுமைந்துஞ்செய்தவர்ச்சனைப்பயனெய்தும்

துறக்கநாடனைந்துசுத்தபல்போகந்துய்த்துமேன்மலபரிபாகம், பிற
க்கநான்முகன்மான்முதற்பெருந்தேவர்பெரும்பதத்தாசையும்பிறவு
மறக்கநாம்வீதிவழங்குதுமென்னவாய்மலர்ந்தருளிவான்கருணை,சிற
க்கநால்வேத சிகையெழுமணிசிவபரஞ்சுடர்விடை கொடுத்தான்.

முடினன்புளகப்போர்வையாலய்யாக்கை முடிமிசையஞ்சலிகமலந்,
சூடினன்வீழ்ந்தானெழுந்துகண்ணருவி துளும்பினன்பன்முறைது
திசெய், தாடினனேயனடிபிரிவாற்றுதஞ்சினவனருளானே; நாடி
னன்பிரியாவிடைகொடுதுறக்கநண்ணினனென்விண்ணவர்நாதன். (கச)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

வந்தரமங்கையர்கவரிமருங்குவீசமந்தாரகற்பகப்பூமாரிதூற்ற,
வந்தரநாட்டவர்முடிகளடிகள்சூட வயிராணிமுலைத்தடந்தோய்ந்த
கலந்தின்றேடாள், விந்தமனச்செம்மாந்துவிம்முகாமவெள்ளத்து
ளுடலழுந்தவுள்ளஞ்சென்று, சுந்தரநாயகன்கருணைவெள்ளத்தாழ்ந்
துதான்முறையின்முறைசெய்தான்றுறக்கநாடன். (கஎ)

முதலாவது - இந்திரன் பழிதீர்த்தபடல முற்றுப்பெற்றது.

ஆகப்படலம்-க0-க்கு - திருவிருத்தம் - சுகூ.

இரண்டாவது

வெள்ளியானைச்

சாபந்தீர்த்தபடலம்.

கொச்சகக்கலிப்பா.

யட்டவிழுங்கொன்றைச்சடையான்மகவானைத்
தொட்டபழியின்றொடக்கறுத்தவாறுதிப்
பட்டமதவேழம்பரனைப்பராய்முனிவ
னிட்டகொடுஞ்சாபந்தீர்த்தேதகியவாறுதுவாம். (க)

கருவாசனைகழிக்குங்காசிகர்தன்னிற்
றுருவாசவேதமுனிதால்லாகமத்தின்
பெருவாய்மையாற்றன்பெயர்விளங்கவீச
னொருவாவிலிங்கவொளியுருவங்கண்டான். (உ)

இன்புற்றருச்சனைசெய்தேத்துவானவ்வேலை
யன்புக்கெளியனருளாற்றிருமுடிமேன்
மின்பொற்கடிக்கமலப்போதான்றுவீழ்த்திடலுந்
தன்பொற்கரகமலப்போதலர்த்தித்தாங்கினன். (ங)

தாங்கிக்கண்சென்னிதடமார்பனைத்துடலம்
வீங்கித்தலைசிறந்தமெய்யுவகைமேற்கொள்ள
நீங்கிக்கழிந்தகருணிதியனையான்
பூங்கற்பகநாட்டிற்போகின்றுனவ்வேலை (சு)

சங்கலறச்செங்களத்துத்தானவனைத்தேய்த்துவிறற்
கொங்கலர்தார்வெய்ந்தமரர்கோமான்றன்கோகரிற்
செங்கணமர்பெருஞ்சேனைக்கடல்கலிப்ப
மங்கலப்பல்லாண்டுமறைமுழங்கவந்தணைவான். (ஙு)

எத்திக்குங்கல்லென்றியங்கலிப்பவேந்திழையார்
தித்திக்தமுதொழுகுங்கீதஞ்செவிமடுப்பப்
பத்திக்கவரிநினைதானைப்படுகடலிற்
றத்திப்புரளுந்தினைபோற்றலைபணிப்ப. (சூ)

அங்கட்கடலினெடுங்கூம்பகநிமிர்ந்த
வங்கத்தலையுய்க்குமீகான்றனைமானத்
திங்கட்குடைநிழற்றத்தீந்தேமதங்கவிழ்க்கும்
வெங்கட்களிற்றின்மிசைப்பவனிபோந்தணைந்தான். (எ)

அத்தலைவிண்ணுடருகணைந்துவெவ்வேறு
தத்தமனக்கிசைந்தகையுறைகடாங்கொடுத்துக்
கைத்தலங்கள்கூப்பினர்கண்டார்கடவுளரி
லுத்தமனையர்ச்சித்துப்போந்தமுனியுத்தமனும். (அ)

தீங்கரியவாசிமொழிசெப்பித்தன்செங்கரத்தி
னீங்கரியதாமனையைநீட்டினன்மற்றதனைத்
தாங்கரியசெல்வத்தருக்காலோர்கையோச்சி
வாங்கிமதயானையின்மேல்வைததான்மதியிலான். (கூ)

கீறிக்கிடந்தமதியனையகிம்புரிக்கோட்
டீறிக்கடங்கவிழ்க்குமால்யானையுச்சியின்மே
லூறிக்கிடந்தநறுமலனாவீழ்த்தியுரற்
சீறிக்கிடந்தெடுந்தாளாற்சிதைத்தன்றே. (கo)

கண்டான்முனிகாமற்காய்ந்தானுதற்கண்போல்
விண்டாரழல்சிதறநோக்கினன்வெங்கோபங்
கொண்டானமரரொதுங்கக்கொதித்தால
முண்டானெனநின்றுருத்தானுணாக்கின்றான். (கக)

புள்ளியதேதாலாடைபுனைந்தரவப்பூணணிந்த
வெள்ளியசெங்கண்விடையானடிக்கமல
முள்ளியமெய்யன்புடையாரருவருத்துத்
தள்ளியசெல்வத்தருக்கிதெனன்செய்தாய். (கஉ)

கதித்தார்முடியமரர்கையுறையேநன்கு
மதித்தாயெம்மீசன்மதிமுடிமேற்சாத்தும்
பொதித்தாதவிழ்மலனைப்போற்றுதுவாங்கி
மிதித்தானைசிந்தவதன்மேல்வைத்தாய்பேதாய். (கங)

வண்டுளருந்தண்டுழாய்மாயோனிறுமாப்பும்
புண்டரிகப்போதுறையும்புத்தேளிறுமாப்பு
மண்டர்தொழுவாழுன்னிறுமாப்புமாலால
முண்டவனைப்பூசித்தபேறன்றுணர்ந்திலையால். (கச)

சேட்டானவனவானவர்சென்னிசெழியரிலோர்
வாட்டானவீரன்வளையாற்சிதறுகரின்
கோட்டானகாற்கோட்டவெண்ணிறத்தகுஞ்சரமும்
காட்டானையாகவெனவிட்டான்கடுஞ்சாபம் (கஞ)

சவித்தமுனிபாதந்தலைக்கொண்டுசெங்கை
குவித்தமரர்தங்கோன்குறையிரப்பானைய
வவித்தபொறியாயெம்மரசுங்காறள்ளுஞ்
செவித்தறுகண்வேழமுந்தீங்குடையரன்றே. (கசு)

அத்தகையநீராற்சபித்தீரடிகேண்மற்
றித்தகையசாபமினிவிடுமினென்றிரந்து
கைத்தலங்கள்கூப்பிக்கனைந்தார்க்கிரங்கியருள்
வைத்தமுனிபிறிதுசாபம்வகுக்கின்றான். (கஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சிந்தனைவாக்கிற்கெட்டாச்சிவனருளளித்தசேட
நிந்தனைபரிகாரத்தானீங்காதுதலைமட்டாக
வந்தமுழுடிமட்டாகமத்தமாவனமாவாகி
யைந்திருபஃதாண்டெல்லையகன்றபின்பண்டைத்தாக. (கஅ)

என்றனன்பிறிதுசாபமிந்திரன்மகுடபங்க
மொன்றியசெய்கைபின்னருணாத்துமற்றஃதுநிற்க
நின்றவெள்ளானைவானநீத்தறிவிழந்துநீலக்
குன்றெனவனத்துவேழக்குழாத்தொடுகுழீயதன்றே. (கக)

மாவொடுமயங்கிச்செங்கண்மறம்பயில்காடுழல்லைப்
பூவொடுவழங்குநீத்தப்புறவமுங்குறவர்தங்க
டேவொடுபயிலுங்கல்லுந்திரிந்துநாணுண்டுஞ்செல்லக்
காவொடுபயிலுந்தெய்வக்கடம்பமாவனம்புக்கன்றே. (உ0)

புக்குரல்வட்டத்தினகாற்பொருவிறவியலிற்றீர்ந்த
மைக்கருங்களிறுழுக்கண்மாதவனருள்வந்தெய்தத்
தக்கதோரமையஞ்சாரமரகதந்தழைத்துமின்னு
நக்கபொன்முளரிபூத்தகளிர்கயந்தலைக்கண்டன்றே. (உக)

கண்டபோதறிவுதோன்றக்கயந்தலைகுடைந்தபோது
பண்டையவடிவந்தோன்றப்பரஞ்சுடரருட்கண்டோன்றக்
கொண்டதோர்பரமானந்தக்குறியெதிர்தோன்றக்கும்பிட்
டண்டர்நாயகனைப்பூசைசெய்வதற்கன்புதோன்ற. (உஉ)

தூம்புடைக்கையான்மொண்டுமஞ்சனத்தூரீராட்டிடத்
தேம்புடையொழுகப்பள்ளித்தாமமும்திருத்துசாத்தி
பாம்புடைத்தாயவேணிப்பரனையர்ச்சிக்கவுள்ளத்
தாம்புடையறிந்தவெந்தையாணையேநோக்கிக்கூறும். (உஉ)

வந்ததையெவனீவேண்டும்வரமெவனைாத்தியென்னச்
சிந்தையிலன்புசூர்ந்தெதய்வதவேழந்தாழ்ந்து
முந்தையில்விளவும்வந்தமுறைமையுமுறையாற்கூறி
யெந்தையையடையப்பெற்றேறற்கினியொருகுறையுண்டாமோ. உச

னென்பதாமாரம்பூண்டவெந்தையிக்கரிகளைட்டோ
டொன்பதாயடியனேனைமுன்னடிபிரியாதுன்றன்
முன்பதாயிவ்விமானமுதுகுறச்சுமப்பலென்றே
னன்பதாயொன்றெண்ணைள்ளத்தடுத்தலாலஃதேவேண்டும். (உந)

இடையறுவன்பின்வேழமிங்ஙனங்கூறவின்னை
நடையவனம்பான்மெய்யன்புடையவனவனைத்தாங்கி
யடைவதேதமக்குவேண்டுமகமகிழ்வென்னைப்பின்னும்
விடையவன்வரங்கணல்கிவிடைகொடுத்தருளினானே. (உக)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

விடைகொடுவணங்கியேகும்வெள்ளானைமேற்றிசையடைந்துத
ன்மேபராற், றடமுமற்றதன்பாலரனையுங்கணைசன்றன்னையுங்கண்ட
ருச்சனைசெய், திடையறுவன்டுந்தாணுமங்கிருக்கு மெல்லியிச்செய்
திகேட்டருள்கூர், கடவுளர்பெருமாணுழையாவினிக்கெங் களிற்
றினைக்கொணர்கெனவிடுத்தான். (உன)

வல்லைவந்தழைத்தார்தம்மைமுன்போக்கிவருவலென்றெழுந்து
கிழ்திசையோ, ரொல்லைவந்தோரூர்தனதுபோராற்கண்டிடந்திசோச்சு
மென்னவிறைவன், றொல்லைவண்பெயராலொன்றுகண்டரனைத்தூயது
சனைசெய்தங்கிருப்பக், கல்லைவன்சிறகுதடிந்தவனின்னுங்களிறுவந்
திலதெனப்பின்னும். (உஅ)

மனத்தினுங்கடியதூதனைவிடுப்பவானைடந்திறைவனைவணங்கிப்
புனத்தினுங்கடியகல்லினும்பன்னட்புன்கமீணையுறவருசாடங்
கனத்தினுங்கரியகண்டனைக்கண்டுகளைந்தஞ்சுதிக்கயத்தி
னினத்தினுங்கழிந்தெதய்வதவேழமினிதுவீற்றிருந்ததுமாதோ. உக

குடவயினாவதப்பெருந்தீர்த்தங்குடைந்தயிராவதகணேசக்,
கடவுளைத்தொழுதைராவதேச்சுரத்துக்கடவுளைப்பணிந்தவர்சாபத்
தொடர்பினும் பாவத்தொடர்பினுங் கழிவர்சுராதிபன் களிறுசென்
னெறிபோ, யிடர்கெடவையைபடிந்துதென்கரையி லிந்திரேச்சுரன
டிபணிவோர். (கூ0)

இம்மையிலறமூன்மூன்றுலெய்தியபயனெய்தி
யம்மையின்மகவானீரோழுரும்பதமளவும்வானில்
வெம்மையில்போகமூழ்கிவெறுப்புவந்தடையவுள்ளச்
செம்மையில்விளைபோன்பச்சிவகதிச்செல்வராவார். (கூக)

உ-ஆவது - வெள்ளையானைச் சாபந்தீர்த்தபடல முற்றுப்பெற்றது.

ஆக படலம் - கக-க்கு திருவிருத்தம் - சஎ0.

மூன்றாவது

திருநகரங்கண்டபடலம்.

கலிநிலைத்துறை

தானவாறிழிபுகர்முகத்தடுகரிசாபம்
போனவாறுணைசெய்துமேற்புதும்திமுழுடிமேல்
வானவாறினன்கடம்பமாவனமூதுநகர
மானவாறதுதனைச்சிறிதறிந்தவாறினைப்பாம். (க).

இன்னரம்புளதோழிசையெழான்மிடற்றளிகள்
கின்னரம்பயில்கடம்பமாவனத்தினின்கீழ்சார்த்
தென்னர்சேகரனெனுங்குலசேகரனுலக
மன்னர்சேகரனரசுசெய்திருப்பதுமிணலூர். (உ)

குலவுமப்பெரும்பதியிளங்கோக்களிலொருவ
னிலவுமாந்திபோலருச்சனைமூதனியதி
பலவுமாஞ்சிவதருமமுஞ்சேதுவான்பரன்பாற்
றலைமைசான்றமெய்யன்பினன்றனஞ்சயனென்பான். (ங

செல்வமாநகரிருந்துமேற்றிசைப்புலஞ்சென்று
மல்லல்வாணிகஞ்செய்துதன்வளம்பதிமீள்வான்
றொல்லையேழ்பவக்கடற்கணாதான்றுவித்தடியா
ரல்லறீர்ப்பவன்கடம்பமாவனம்புகுமளவில். (சு)

இரவிகண்மறைந்தேதிழம்பரியிரதமுந்தாணு
மூரவுநீர்க்கருங்கடலில்வீழ்ந்தொளித்தனைக
விரவுநீண்மயங்கிருள்வயிற்றமியனுய்மெலியு
மரவுநீர்ச்சடையண்ணலுக்கன்பிலேனங்கண். (ரு)

வாங்குநான்மருப்பேந்தியமதமலையிருத்தந்
தாங்கியாயிரங்கரங்களாற்றடவியெண்டிசையுந்
தூங்குகாரிருதிரத்துசெஞ்சுடரெனச்சூழ்போய்
வீங்குகாரிருளொதுக்கியவிமானமேர்கண்டான். (சூ)

அடித்தலைந்தனனவிர்சுடர்விமானமீதமர்ந்த
கடுத்ததும்பியகண்டனைக்கண்டுதாழ்ந்துவகை
மடுத்தநெஞ்சினனங்ஙனம்வைகிருள்கழிப்பா
னெடுத்தசிந்தையினிருந்தனனிருக்குமவ்விருள்வாய். (எ)

சோமவாரமன்றுதலாற்சுரர்களங்கெய்தி
வாமமேகலைமலைமகடலைமகன்மலர்ந்த
காமர்சேவடிபணிந்தவன்கங்குல்போற்கருதி
யாமநான்கிலுமருச்சனையின்புறப்புரிவார். (அ)

அண்டர்வந்ததுமருச்சனைபுரிவதுமனத்துந்
தொண்டரன்பினுக்கெளியவன்சுரர்தொழக்கறுத்த
கண்டனின்னருட்கண்ணினற்கண்டனனுதலிற்
புண்டரம்பயிலன்புடைப்புண்ணியவணிகன். (கூ)

நானமென்பனிநறும்புனலயகன்பூசைக்
கானநல்வினைவருக்கமுமமரர்கைகொடுத்து
ஞானவெண்மதிச்சடையவன்கோயிலின்ஞாங்கர்த்
தானமர்ந்தருச்சனைசெய்வான்றங்கணையகனை. (கo)

வள்ளறன்னைமெய்யன்பிலைருச்சிசெய்வாலை
ருள்ளவல்வினையீட்டமுங்கங்குலுமொதுங்கக்
கள்ளமில்லவன்யானையுங்கண்டிலன்கண்டான்
றள்ளருஞ்சுடர்விமானமேற்றனித்துறைதனியை. (கக)

ஆழகசிங்கையனதிசயமடைந்துசெவடிக்கீழ்
காழ்ந்தெழுந்திருகைகளுந்தலைமிசைக்கூப்பிச்
சூழ்ந்துதன்பதிக்கேகுவானெருதலைதுணிந்து
வாழ்ந்தவன்பினென்விடைகொடுவழிக்கொடுவந்தான். (கஉ)

முக்கடம்படுகளிற்றினன்முகிறவழ்கோயில்
புக்கடங்கலர்சிங்கமன்னனைதிர்புகல்வான்
திக்கடங்கலுங்கடந்த வெந்திகிரியாய்நெருங
லக்கடம்பமாவனத்திலோரதிசயங்கண்டேன். (கங)

வல்லவாணிகஞ்செய்துகான்வருவழிமேலக்
கல்லடைந்ததுவெங்கதிர்க்கங்குலும்பிறப்பு
மெல்லகாணியகண்டனனிரவிமண்டலம்போ
லல்லதுஞ்சுடர்விமானமுமதிற்சிவக்குறியும். (கச)

மாவலம்புதார்மணிமுடிக்கடவுளர்வந்தத்
தேவதேவனையிரவெலாமருச்சனைசெய்து
போவதாயினர்யாணுமட்டுபான்னெதுங்கோயின்
மேவுமீசனைவிடைகொதுமீண்டனனென்றான். (கஎ)

மூலுமன்பினன்மொழிந்திடமுக்கணம்பெருமான்
ரூலுமஞ்சலிகரங்களுந்தலையில்வைத்துள்ள
நீலுமன்புமற்புதமுமேமிரம்பநீர்நூல
மாலுமன்னவனிருந்தனன்போயினனருக்கன்.

ஈட்டுவார்வினையொத்தபோதிருன்மலங்கருக
வாட்டுவாரவர்சென்னிமன்மலரடிக்கமலஞ்
சூட்டுவார்மறைகடந்ததந்தொல்லுருவிளங்கக்
காட்டுவாரொருசித்தராய்த்தோன்றினர்கனவில்.

வடிகொள்வேலினையங்கடம்பமாவனத்தினைத்திருந்தக்
கடிகொள்காடகழ்ந்தணிநகர்காண்கெனவுணர்த்தி
யடிகளேகினர்கவுரியராண்டகைகங்குல்
விடியும்வேலகண்விழித்தனன்பரிதியும்விழித்தான்.

கனவிற்றீர்ந்தவனியதியின்கடன்முடித்தமைச்சர்
சினவிற்றீர்ந்தமாதவர்க்குந்தன்கணத்திறஞ்செப்பி
கனவிற்கேட்டதுங்கனவினிற்கண்டதுகயப்ப
வினவிக்கேள்ந்துகொண்டிடமுந்தனன்மேற்றினைசச்செல்வான்.

அமைச்சரோடுமந்தீபமாவனம்புகுந்தம்பொன்
சமைத்தவிழ்ந்தபொற்றூமனைத்தடம்படிந்தெளிவிட்
டிமைத்தலர்ந்தபொன்விமானமீதினிதுவீற்றிருந்தோர்
தமைச்சரண்பணிந்தஞ்சலிதலையின்மேன்முகிழ்த்தான். (உ0)

அன்புபின்றள்ளமுன்புவந்தருட்கணீர்தேங்க
வென்புநெக்கிடவேகிவீழ்ந்திணையடிக்கமலம்
பொன்புனைந்ததார்மௌலியிற்புனைந்தெழுந்திறைவன்
முன்புநின்றுசொற்பதங்களாற்றோத்திரமொழிவான். (உக)

சரணமங்கையோர்பங்குறைதங்கசரணஞ்
சரணமங்கலமாகியதனிமுதல்சரணஞ்
சரணமந்திரவடிவமாஞ்சதாசிவசரணஞ்
சரணமும்பர்கணயகபசுபதிசரணம். (உஉ)

ஆழிநூலமேலாசையுமமர்வான்பதமேல்
வீழுமாசையும்வெறுத்தவர்க்கன்றிமண்ணெண்டி
சீழைமூழ்கிவானரகொடுபிணிபடச்சுழலு
மேழையேங்கலுக்காவதோவெந்தைதன்கருணை. (உங)

சூளதாமமறச்சென்னியுந்தொடத்தொடநீண்ட
நீளனீபுனக்கன்பிலமாயினுநீயே
மூளவன்புதந்தெங்குடிமுழுவதும்பணிகொண்
டாளவேவெகாலிக்கானகத்தமர்ந்தனையென்ன. (உச)

சுரந்தவன்பிருகண்வழிச்சொரிவபோற்சொரிந்து
பரந்தவாறுசிவானந்தப்பரவையுட்படிந்து
வரந்தவாதமெய்யன்பினல்வலங்கொடுபுறம்போந்
தரந்தைதீர்ந்தவனுருசிறையமைச்சரோடிருந்தான். (உ.ந)

ஆயவேலையின்மன்னவனணையாலமைச்சர்
மேய்வேவலர்துறைதுறைமேவினர்விடுப்பப்
பாயவேலையினுய்த்தனர்வழிக்கொடுபடர்ந்தார்
சேயகாடறிந்தணிகர்செய்திதாழின்மாக்கள். (உசு)

வட்டவாய்மதிப்பிளவின்வெள்யாய்க்குயகவிய
மிட்டதோளினர்யாப்புடைக்கச்சினரிரும்பின்
விட்டகாளொளிமெய்யினர்விசிகொள்வார்வன்றோற்
றொட்டகாலினர்வனமெறிதாழினரானர். (உன)

மறியுமோதைவண்டரற்றிடமரந்தலைபனிப்ப
வெறியுமோதையுமெறிபவமோதையுமிரங்கி
முறியுமோதையுமுறிந்துவீழ்தோதையுமுகில்வாய்ச்
செறியுமோதையுங்கீழ்ப்படமேற்படச்செறியும். (உ

ஒளிறுதாதொடுபோதுசெந்தேனுகவொலித்து
வெளிறில்வண்மருஞ்சினையிறவீழ்வசெங்களத்துப்
பிளிறுவாயவாய்நிணத்தொடுகுருதிநீர்பெருகக்
களிறுகோடிறமாய்ந்துவீழ்காட்சியவனைய. (உ

பூவடைந்தவண்டினமயற்புறவொடும்பழனக்
காவடைந்தனபறவைவான்கற்பகமடைந்த
கோவடைந்திடவொதுங்குறுங்குறும்புபோற்சிறிந்து
மாவடைந்தனமாதுளவனைகளுங்காதும். (ஈ

இருணிரம்பியவனமெலாமெறிந்துமெய்யுணர்ந்தோர்
தெருணிறைந்தசிந்தையின்வெளிசெய்துபல்லுயிர்க்கு
மருணிறைந்துபற்றறுத்தானடிநிழலடைந்த
கருணையன்பர்தம்பிறப்பெனவெரொடுங்களைந்தார். (ஈ

களைந்துநீணிலந்திருத்திச்செந்நெறிபடக்கண்டு
வளைந்துநன்னகொடுப்பதெவ்வாறெனத்தேறல்
விளைந்துதாதுகுதார்முடிவேந்தன்மந்திரோ
டுளைந்தளாவியசிந்தையோடிருந்தனனங்கண். (ஈ

மெய்யரன்புதாய்சேவடிவியனிலந்தீண்டப்
பொய்யகன்றவெண்ணீறணிமேனியார்பூதிப்
பையர்ள்ளிருட்கனவில்வந்தருளியபடியே
யையர்வல்லைவந்தருளினரரசுளங்களிப்ப. (ஈ

கனவிலும்பெருங்கடவுளர்காண்பதற்கரியார்
நனவிலும்வெளிவந்தவர்தமையெதிர்நண்ணி
நினைவினின்றதாளிறைஞ்சிநேர்நின்றுநல்வரவு
வினவியாதனங்கொடுத்தனன்மெய்யுணர்வேந்தன். (ஈ

தென்னரன்பினிலகப்படுசித்தர்தாமுன்னர்ச்
சொன்னவாதிநூல்வழிவருசார்புநூற்றொடர்பா
ணன்னராலயமண்டபங்கோபுரநகர
மின்னவாறுசெய்யெனவகுத்திம்மெனமறைந்தார். (ஈ

மறைந்தெவற்றிலுங்நிறைந்தவர்மலரடிக்கன்பு
நிறைந்தநெஞ்சுடைப்பஞ்சவனிலத்துமேம்பட்டுச்
சிறந்தசிற்பநூற்புலவராற்சிவபரஞ்சுடர்வந்
தறைந்துவைத்தவாரூலயமணிநகர்காண்பான். (நுசு)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மறைபயில்பதுமமண்டபமருத்தமண்டபமழைநுழைவுளைவாய்ப், பிறைபயில்சிகைமாமண்டபமறுகாற்பீடிகைதிசையெலாம்பிளக்கும், பறைபயினிருத்தமண்டபம்விழாக்கொள்பன்மணிமண்டபம்வேள்வித், துறைபயில்சாலதிருமடைப்பள்ளிசூழுறைதேவர்தங்கோயில். (நுஎ)

வலவயினிமயவல்லிபொற்கோயின்மாளிகையடுக்கியமதில்வா, னிலவியகொடிய நெடியசூளிகைவானிலாவிரிதவளமாளிகைமீன், சூலவியகுமிக்குன்றிவர்செம்பொற் கோபுரங்கொண்டல்கண்படுக்குஞ், சுலவெயிலகழிக்கிடங்குகம்மியநூற்றெருல்வரம்பெல்லைகண்டமைத்தான். (நுஅ)

சித்திரநினைத்தபீடிகைமறுகுதெற்றிகள்வாணிலாத்தெளிக்குஞ்
சித்திலநினைத்தவிழாவருவீதிநிழன்மணிச்சாளரவொழுக்கப்
பித்திகைமாடப்பெருந்தருக்கவலீடுசால்சதுக்கநற்பொதியில்
பத்தியிற்குயின்றமன்றுசெய்குன்றுபருமணிமேடையாடரங்கு.

அருந்தவரிருக்கையந்தணருறையுளரசராவணங்குலவணிகப்
பெருந்தெருநல்வேளாளர்பேரறஞ்சால்பெருங்குடியேனையகரிதேர்
திருந்தியபரிமாநிலக்களங்கழகந்தீஞ்சுவையாறுநான்குண்டி
யிரந்தவர்க்கருத்துநல்லறச்சாலையினையனபிறவுநன்கமைத்தான். சுo

துணிகயங்கிழ்நீர்க்கூவல்பூவோடைதொடுகுளம்பொய்கைகந்தவனஞ், தினிமலர்ச்சோலை துடவையுய்யானந் திருநகர்க்கணிபெறச்செய்து, மணிமலர்த்தாரோன்மாளிகைதனக்கம்மாநகர்வடகுணபாற்கண், டணிநகர்சாந்திசெய்வதுகுறித்தானன்னைலாரறிந்ததுசெய்வார். (சக)

பொன்மயமானசடைமதிக்கலையின்புத்தழுதுகுத்தனரதுபோய்ச்
சின்மயமானதம்மடியடைந்தார்சிவமயமாக்கியசெயல்போற்
றன்மயமாக்கியங்நகர்முழுதுஞ்சாந்திசெய்ததுவதுமதுர
ரனையமானதன்மையான்மதுராநகனெனவுரைத்தனர்நாமம். (சஉ)

கிட்டிசைசக்கரியசாத்தனுந்தென்சார் கிற்றுவெண்பிறைநுதற்க
ளிற்றுக், கோட்டிளங்களடக்கொங்கையன்னையருங் குடவயின்மது
மடையுடைக்குந், தோட்டிளந்தண்ணந்துழாயணிமௌலித்தோன்
றலும்வடவயிற்றோன்றி, நீட்டிரும்போந்தினிமிர்குழலெண்டோணீ
லியுங்காவலாகிறுவி. (சஉ)

கைவனையெருத்திற்கனவளைகிடந்தகாட்சியிற்பொலிந்தானிர்
கோயின், மைவளைமிடற்றுமதுரைநாயகனை மரபுளியருச்சனைபுரி
வான், பொய்வளைமறையா.கமநெறியொழுகும் புண்ணியமுனிவ
னையாதி, சைவனைக்காசிப்பதியினிற்கொணர்ந்து தலத்தினிற்றாப
னஞ்செய்தான். (சக)

உத்தமகுலத்துநாற்பெருங்குடியுமுயர்ந்தவுமிழிந்தவுமயங்க, வை
த்தவுமானபுறக்குடிமூன்றுமறைவழுக்காமலுவகுத்த, தத்தமநெறி
னின்றுழுகலைதிகழுஞ்சைவமுந்தருமமுந்தழைப்பப், பைத்தெழு
தினாநீர்ஞாலமேற்றிலகம்பதித்தெனகர்வளம்படுத்தான். (சஙு)

அன்றுதொட்டரசனங்ககொய்தியணிகெழுமங்கலமியம்ப, வெ
ன்றுதொட்டிமைக்குமனையின்மங்கலநா ளெய்தினினிருந்துமுப்பு
ரமுங், குன்றுதொட்டெய்தான்கோயின்மூன்றுறுப்புங்குறைவில்பூச
னைவழாதோங்கக், கன்றுதொட்டெறிந்து கனியுகுத்தான்போற்கவி
துரந்தரசுசெய்நாளில். சஙூ

பவநெறிகடக்கும்பார்த்திவன்கிரணம் பரப்பிளம்பரிதிபோன்
மலயத், துவசனைப்பயந்துமைந்தன்மேன்ஞாலஞ்சுமந்திநாள் பலக
ழிக்தொருநா, * னவவடிவிறங்கோலையத்தெய்நி நாதனைப்பணிந்
துழுவலஞ்செய், துவமையிலின்பவருணிழலெய்தியொன்றியொன்
றுநிலைநின்றான். (சஙஎ)

திருநகரங்கண்டபடலம் - முற்றுப்பெற்றது.

ஆகபடலம் - கஉ-க்கு - திருவிருத்தம் - நுகள.

---

* நவவடிவம்-பிரமன்-விஷ்ணு-ருத்திரன்-மகேசுவரன் - சதாசிவம்-நாதம்-சத்தி-சிவம்.

உ

நான்காவது

கடாதகைப்பிராட்டியார்

திருவவதாரப்படலம்.

கலிவிருத்தம்.

கன்னியொருபங்கினர்கடம்பவனமெல்லா
நன்னகரமான துநவின்றுழுலகீன்ற
வன்னைமகளாகிமலயத்துவசனுகுந்
தென்னனிடைவந்துழுறைசெய்ததுனைசெய்வாம். (க)

மனுவறமுவந்துதன்வழிச்செலநடத்தும்
புனிதன்மலயத்துவசன்வென்றிபுனைபூணன்
கனியமுதமன்னகருணைக்குறையுள்காட்சிக்
கினியண்வட்சொற்கடறமிழ்க்கடலிகந்தோன். (உ)

மேனில்விறல்வேள்வடிவண்வேட்கைவினைபூமி
யானமடவார்கள்பதிணயிரவருள்ளான்
வானைழுகுபானுவழிவந்திதாழுகுசூர
சேனன்மகள்காஞ்சனையமன்றல்வினைசெய்தான். (ங)

கண்ணுதலைழுப்பெழுதும்வந்துபணிகற்ரு
னென்னில்பலநாண்மகவிலாவறுமையெய்திப்
பண்ணரியதானதருமம்பலவுமாற்றிப்
புண்ணியநிரம்புபரிவேள்விபுரிகுற்ரூன். (ச)

சுறின்மறைகூறுழுறையெண்ணியாருதோண்ணுற்
ரூறினைதிழுன்றுமகமாற்றவமசெ
ஞாறுமகழும்புரியினென்பதொடிப்பின்
மாறுமெனமற்றதனைமாற்றியிதுசாற்றும். (ஞ)

கண்பொருள்விரும்பினையதற்கிசையநூல
தின்புறுமகப்பெறுதியென்றமரர்நாடன்
ன்புலமடைந்திடலுநிம்பகுதார்ரான். (ஈ)

திக்கமகவேள்விசெய்விருப்புடையனகி
பக்கணமதற்குரியயாவையுமமைத்துத்
தக்கநியமத்துரியதேவியொடுசாலை
புக்கனனிருந்துமகவேள்விபுரிகிற்பான். (எ)

ஆசறமறைப்புலவராசிரியர்காட்டு
மாசறுசடங்கின்வழிமந்திரமுதாத்த
மோசையணுதாத்தசொரிதந்தழுவவோதி
வாசவனிருக்கையிலிருந்தெரிவளர்ப்பான்.

விசும்புநிலனுந்திசையும்வேள்வியதுசாலைப்
பசும்புகைபடர்ந்தொருபடாமெனமறைப்பத்
தசும்புபதினெய்பொரிசமித்திணைவாளேர்க்
ககும்புபடுமின்னழுதினுகுதிமடுத்தான். (அ)

ஐம்முகனுதிபரமாத்தனுனையாற்று
னெய்ம்முகநிறைத்தழனிமிர்த்துவருமெல்லை
பைம்முகவராவணிபரஞ்சுடர்தனிப்ப
மைம்முகனெதிர்கணிமவான்மினவிதான. (கூ)

வள்ளன்மலயத்துவசமீனவன்வலத்தோ
ள்ளமனைகாஞ்சனைசுருங்கியமருங்கு
றள்ளவெழுகொங்கைகடதும்பநிமிர்தீம்பால்
வெள்ளமொழுகக்காரியவேற்கணிடனை. (கக)

இவ்வுலகமன்றியுலகேழுமகிழ்வெய்தச்
சைவமுதலாயினதவத்துறைநிவப்ப
வெளவியமறங்கெடவறங்குதுகளிப்பத்
தெய்வமறைதுங்துபிதிசைப்புலனிசைப்ப. (கஉ)

மைம்மலர்நெடுங்கணரமங்கையர்நிடிப்ப
மெய்ம்மனமொழிச்செயலின்வேறுபடலின்றி
யம்மதுரைமாநகருளாரகமகிழ்ச்சி
தம்மையறியாதனகலத்தலைசிறப்ப. (கங)

மாந்தர்பயின்மூவறுசொன்மாநிலவனைப்பிற்
றோந்தமிழ்வழங்குதிருநாடதுசிறப்ப
வாய்ந்ததமிழ்நாடரசளித்துமுறைசெய்யும்
வேந்தர்களின்மீனவர்விழுத்தகைமையெய்த. (கச)

நொய்தழலெரிக்கடவுணிறற்றபயனெய்தக்
கொய்தளிரொளித்தழல்கொழுந்துபடுகுண்டத்
ததவிழிதழ்க்கமலமடப்பொழுதலர்ந்தோர்
மெய்துளிர்வினைக்கொடிமுளைத்தெழுவதென்ன (கஞ)

விட்டிலகுசூழியம்விழுங்குசிறுகொண்டை
வ்ட்டமதிவாய்க்குறுழுயற்கறையைமானக்
கட்டியதிறற்றியகதிர்த்தராளமாலை
சுட்டியதில்விட்டொழுகுசூழ்கிரணமொப்ப.

தீங்குதலையின்னமுதமார்பின்வழிசிந்தி
யாங்கிளநிலாவொழுகுமாரவடமின்ன
வீங்குடலிளம்பரிதிவெஞ்சுடர்விழுங்கி
வாங்குகடல்வித்துருமமாலையொளிகால. (கக)

சிற்றிடைவளைந்தசிறுமென்றுகில்புறஞ்சூழ்
பொற்றிருமணிச்சிறியமேகலைபுலம்ப
விற்றிருமணிக்குழைவிழுங்கியகுதம்பை
சுற்றிருள்கடிந்துசிறுதீதாள்வருடியாட. (கஎ)

தெள்ளமுதமென்மழலைசிந்தவிளமூரன்
முள்ளெயிறரும்பமுலைமூன்றுடையதேர்ப்பெண்
பிள்ளையெனலூடவொருபிராயமொதுங்கின்று
ளெள்ளரியபல்லுயிருமெவ்வுலகுமீன்றுள். (கஙு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

குறுந்தளிர்மெல்லடிகிடந்தசிறுமணிநூபுரஞ்சதங்கைகுழறிசை
ங்க, நறுந்தளிர்போலஞ்சுந்தளிர்நடையொதுங்கிமழலையிளநகைய
ந்தோன்றப், பிறந்தபரும்பயன்பெறுபொன்மாலைமடியிருத்தினாரு
பெண்பிள்ளையாளை, எறிந்தழுவுதெரிந்தின்றேர்க்கிகம்போகம்வீடன்
க்குமம்மையம்மா. (உ0)

செய்யவாய்வெளிறுதுதுணைமுலைக்கண்கருகாதுசேல்போனீ
